கமெண்ட் கந்தர்...




Follow us:

# தமிழன்

THAMILAN

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 03, இதழ்: 148 சுபகிருது வருடம், தை மாதம் 02 ஆம் திகதி திங்கட்கிழமை
(16.01.2023) ஹிஜ்ரி 1444, ஜமா அதுல் ஆகிர் - 23, 0115 886187 - பக்கங்கள் 10

விலை ரூ.60

## பரீட்சைக் காலத்தில் வேண்டாம் மின்தடை!

### பரீட்சைத் திணைக்களம் கோரிக்கை

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை இடம்பெறும் காலப்பகுதியில் மின் துண்டிப்பின்றி விநியோகிக்குமாறு, பரீட்சைத் திணைக்களம் மின்சார சபை மற்றும் தனியார் மின் விநியோக நிறுவனங்களிடம் கோரியுள்ளது.

பரீட்சை இடம்பெறும் காலகட்டத்தில் மாணவர்கள் எந்தவொரு இடையூறுமின்றி ...

02 பக்கம்

# 13 ஆவது திருத்தம் முழு அமுலாக்கம்!

### அடுத்த 2 வருடங்களில் இடம்பெறுமென ஜனாதிபதி ரணில் யாழில் அறிவிப்பு

(யாழ்.நிருபர் )

இன்னும் சில வருடங்களுக்குள் 13ஆவது திருத்தத்தின் முழு அமுலாக்கம் இடம்பெறுமென ஜனாதிபதி ரணில் யாழ்ப்பாணத்தில் அறிவித்துள்ளார்.

தேசிய பொங்கல் விழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய ஜனாதிபதி அங்கு மேலும் கூறியதாவது,

யாழில் கலைகளில் சிறந்த முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்படுவதால் இங்கும் தேசிய கலை நிகழ்வொன்றை நடத்துவதற்கு உத்தேசித்துள்ளோம். நாட்டுக்கு நல்லிணக்கம் தேவை.

இனவாதம், யுத்தம், வங்குரோத்து அரசியலால் மக்களிடையே பிரிவினை ஏற்பட்டது. மத, இன ரீதியான பிளவுகள் ஏற்பட்டன. நாம் ஒரே நாட்டில் அமைதியாக வாழவேண்டுமானால் 75 வருடங்களுக்கு முன்னர் முன்னாள் பிரதமர் டி.எஸ். சேனநாயக்க முன்வைத்த கொள்கைகளை ...

02 பக்கம்



கொச்சிக்கடை பொன்னம்பலவாணேஸ்வரம் சிவன் கோவிலில் நேற்றுக் காலை பொங்கல் நிகழ்வில் எடுக்கப்பட்ட படம். (படப்பிடிப்பு - லலித் பெரேரா)

## நேபாள விமான விபத்து: 72 பேரும் உயிரிழப்பு?

10 பக்கம்

## ஜனாதிபதிக்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தின் மீது நீர்த்தாரைப் பிரயோகம்

### யாழ்ப்பாணத்தில் நேற்று பரபரப்பு

தேசிய பொங்கல் விழாவைக் கொண்டாடுவதற்காக வடக்கிற்கு விஜயம் செய்துள்ள ஜனாதிபதியின் வருகைக்கு எதிர்ப்புத் தெரிவித்து, நேற்று ஞாயிற்றுக்கிழமை மதியம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்றலில் அமைதி வழிப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

ஆர்ப்பாட்டப் பேரணியை வழிமறித்த பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் பேரணி மீது நீர்த்தாரைப் பிரயோகத்தை மேற்கொண்டனர்.

குறித்த பேரணியில் பல்கலைக்கழக மாணவர்கள், வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்கள், அரசியல் கைதிகளின் உறவுகள், அரசியல் பிரமுகர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

பேரணி காரணமாக பொலிஸார், இராணுவத்தினர் உட்பட பாதுகாப்புப் படையினர் குவிக்கப்பட்டு கண்காணிப்பு நடவடிக்கை பலப்படுத்தப்பட்டது.

02 பக்கம்



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, யாழ்ப்பாணத்தில் தேசிய தைப்பொங்கல் விழாவில் கலந்துகொண்டபோது...

## எம்முடன் பயணிப்பது தொடர்பில் மைத்ரியே தீர்மானிக்க வேண்டும்!

### விமல் வீரவங்ச தெரிவிப்பு

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவங்கள் தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேனவுக்கு எதிராக நீதிமன்றம் வெளியிட்டுள்ள வழக்கு தீர்ப்புக் குறித்து அவர் சிந்தித்து வருகிறார் என்று கருதுகிறேன். தீர்மானமொன்றை எடுத்ததன் பின்னர் அதனை மக்களுக்கு அறிவிப்பார். மேலும் தொடர்ந்து எங்களுடன் பயணிப்பதா இல்லையா என்பதையும் அவரே அறிவிக்கவேண்டும் என்று உத்தர லங்கா சபாவின் தலைவரும் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவருமான விமல் வீரவங்ச தெரிவித்தார்.

சுதந்திர மக்கள் கூட்டணியிலிருந்து சுதந்திரக் கட்சி விலகுமாக இருந்தால் அது கூட்டணிக்கு பாதிப்பை ஏற்படுத்தாது என்றும் ஏனைய கட்சிகளுடன் இணைந்து ஹெலிகொப்டர் சின்னத்தினூடாக உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடுவோம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

02 பக்கம்

## ஓமானிலிருந்து மேலும் 15 பெண்கள் நாடு திரும்பினர்

ஓமானிலுள்ள இலங்கை தூதரகத்தின் பாதுகாப்பு மையத்தில் தடுத்துவைக்கப்பட்டிருந்த இலங்கையைச் சேர்ந்த 15 பெண்கள் நேற்று அதிகாலை கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளனர்.

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் UL 206 விமானத்தின் மூலம் இவர்கள் நேற்று அதிகாலை 5.00 மணியளவில் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்ததாக...

02 பக்கம்

## 55 அரச நிறுவனங்கள் 4 மாதங்களில் 86 ஆயிரம் கோடி ரூபா நட்டம்!

### நிதியமைச்சின் அறிக்கையில் வெளியான தகவல்

(ம.சுசிகலா )

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், இலங்கை மின்சார சபை, ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ் உள்ளிட்ட வருமானத்தை ஈட்டக்கூடிய 55 முக்கிய அரச நிறுவனங்கள் கடந்த வருடத்தின் முதல் நான்கு மாதங்களில் மாத்திரம் 86 ஆயிரம் கோடி ரூபா நட்டத்தை சந்தித்துள்ளதாக நிதியமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாக பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பொருளாதாரம் மற்றும் புள்ளிவிபரவியல் துறை பேராசிரியர் வசந்த அத்துகோரள தெரிவித்தார்.

இது 2021ஆம்ஆண்டு அந்த நிறுவனங்களுக்கு ஏற்பட்ட இழப்பை விட அதிகம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு 62 ஆயிரத்து 800 கோடி ரூபா நட்டம் ஏற்பட்டதுடன், அதுவே ...

02 பக்கம்

## ரூ.10 கோடி வழங்க பணமில்லை; கோட்டையில் உண்டியல் குலுக்குவதா?

### சோகத்தை சொல்கிறார் மைத்ரி

ஈஸ்டர் தினத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் 10 கோடி ரூபா பணம் வழங்க எனக்கு நீதிமன்று உத்தரவிட்டுள்ளது. ஆனால், அந்தத் தொகையை செலுத்த என்னிடம் வழியில்லை. இந்தத் தீர்ப்பிற்கு தலை வணங்குகிறேன். இதற்கான பணத்தை சேகரிக்க புறக்கோட்டை அரச மரத்திற்கடியில் உண்டியல் குலுக்குவதா?

இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன நேற்று நிட்டம்புவ பொது விளையாட்டரங்கில் இடம்பெற்ற பட்டமளிப்பு



விழாவில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு பேசுகையில் தெரிவித்தார்.

02 பக்கம்



# தேசிய பாதுகாப்பு சட்டமூலம் விரைவில் அமைச்சரவைக்கு

புதிய தேசிய பாதுகாப்பு சட்டமூலம் விரைவில் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக நீதி அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்பட்டு, அதற்குப் பதிலாக இந்த புதிய தேசிய பாதுகாப்புச் சட்டமூலம் கொண்டுவரப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

புதிய சட்டமூலத்தை அடுத்த வாரத்திற்குள் அமைச்சரவையில் முன்வைக்கும் நோக்கில் அமைச்சரவை செயலகத்திற்கு அனுப்பி வைக்கப்படவுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் ஜனாதிபதி சட்டத்தரணி நெரில்புள்ளே மற்றும் ஜனாதிபதி சட்டத்தரணி நளின் டி இந்திரதிஸ்ஸ ஆகியோரின் இணைத் தலைமையுடன் நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவினால் தேசிய பாதுகாப்பு சட்டமூலம் தயாரிக்கப்பட்டுள்ளதாக நீதி அமைச்சு தெரிவித்துள்ளது. அத்துடன் அந்தக் குழுவின் அறிக்கை கடந்த வாரம் அமைச்சரிடம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

# சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தலுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு தேர்தல் ஆணைக்குழு கோரிக்கை

சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலை நடத்துவதற்கு அவசியமான ஒத்துழைப்பை வழங்குமாறு அரசாங்கம், அரசியல் கட்சிகள், மக்கள் உள்ளிட்ட அனைத்து தரப்பினரிடமும் தேர்தல் ஆணைக்குழு கோரிக்கை விடுத்துள்ளது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் வேட்புமனு கோரலுக்கான திகதியை அறிவிப்பதற்கு முன்பிருந்தே சில தரப்பினர் தேர்தல் நடத்துவதற்கு இடையூறு விளைவிக்கும் வகையில் பல்வேறு செயற்பாடுகளில் ஈடுபட்டு வந்ததாக தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர், சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவா தெரிவித்தார்.

சில அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தேர்தல் தொடர்பில் முரண்பாடான கருத்துகளை வெளியிட்டமை, கட்டுப்பணம் பொறுப்பேற்பதை இடைநிறுத்துமாறு பொது நிர்வாக அமைச்சின் செயலாளர், மாவட்ட செயலாளர்களுக்கு கடிதம் அனுப்பியமை மற்றும் தேர்தல் ஆணைக்குழு மற்றும் பொலிஸ்மா அதிபருக்கிடையிலான சந்திப்பு தொடர்பில் சில ஊடகங்கள் போலியான தகவல்களை வெளியிட்டமை உள்ளிட்ட சம்பவங்கள் இவற்றில் உள்ளடங்குவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இவ்வாறான கருத்துகள் மற்றும் சிக்கல்களை உருவாக்கும் செயற்பாடுகள் சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலை நடத்துவதற்கு இடையூறாகும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவதானம் செலுத்தி உரிய முறையில் தேர்தலை நடத்துவதற்கு அவசியமான ஒத்துழைப்பை வழங்குமாறு அனைத்து தரப்பினரிடமும் கோரிக்கை விடுப்பதாக தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

### எம்முடன் பயணிப்பது...

மைத்ரிபால சிறிசேனவுக்கு எதிராக உயர் நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட வழக்கு தீர்ப்பின் பின்னர் சுதந்திர மக்கள் கூட்டணியின் தலைவர்களுக்கு இடையில் அவசர கலந்துரையாடலொன்று இடம்பெற்றிருந்தது. அந்தக் கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போது வரையில் சுதந்திரக் மக்கள் கூட்டணியிலிருந்து எந்தக் கட்சியும் வெளியேறவில்லை. எந்தவொரு புதிய கட்சிகளும் இணைந்துக்கொள்ளவும் இல்லை. எதிர்காலத்தில் கூட்டணியிலுள்ள கட்சிகளின் எண்ணிக்கை அதிகரிக்கும்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி கூட்டணியிலிருந்து விலகுமாக இருந்தால், அது அவர்களின் தீர்மானமாகும். அவ்வாறு அவர்கள் கூட்டணியிலிருந்து விலகுவதற்கு தீர்மானித்தார்கள் என்றால், அதனை ஏற்றுக்கொள்ள தயாராகவே இருக்கிறோம். மீதுமுள்ள அனைத்துக் கட்சிகளும் ஒன்றிணைந்து 'ஹெலிகொப்டர்' சின்னத்தில் போட்டியிடுவோம்.

விசேட வெற்றியை பெற்றுக்காட்டக்கூடிய வாய்ப்பு எங்களுக்கு இருக்கிறது. அதனை செய்து காட்டுவோம். கூட்டணியிலிருந்து விலகுவதாக இதுவரையில் சுதந்திரக் கட்சி அறிவிக்கவில்லை. வேட்புமனுக்கான பெயர் பட்டியல்களை தயாரிக்கும் நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகிறோம். இந்த நடவடிக்கைகள் இன்னும் ஓரிரு தினங்களில் நிவைடையும். அதன் பின்னர் எங்களின் கருத்துகளையும் நிலைப்பாடுகளையும் வெளியிட்டு வெற்றிப்பாதையில் பயணிப்போம்.

உயிர்த்த ஞாயிறுதின தாக்குதல் சம்பவம் தொடர்பில் நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட வழக்கு தீர்ப்பினூடாக, முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேனவின் அரசியல் செயற்பாடுகளுக்கு ஏற்பட்டுள்ள அச்சுத்தல் குறித்து அவர் சிந்தித்து வருகிறார் என்று கருதுகிறேன். அது குறித்து தீர்மானமொன்றை எடுத்ததன் பின்னர் அறிவிப்பார். எங்களுடன் தொடர்ந்து பயணிப்பதா இல்லையா என்பதை அவரே அறிவிக்க வேண்டும் என்றார்.

### 55 அரச நிறுவனங்கள்...

கடந்த ஆண்டில் அதிகமான நட்டமாகவும் குறிப்பிடப்படுகிறது. இதேவேளை ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸுக்கு 24 ஆயிரத்து 800 கோடி ரூபாவும் இலங்கை மின்சார சபைக்கு 4700 கோடி ரூபாவும் நட்டம் ஏற்பட்டுள்ளது.

இதேவேளை, மேற்குறிப்பிட்ட 55 அரச நிறுவனங்களும் கடந்த 2021ஆம் ஆண்டு ஒரு இலட்சத்து ஐம்பதாயிரத்து அறுநூறு கோடி ரூபா அரசாங்கத்தை உத்தரவாதமாக வைத்து கடனாகப் பெற்றுள்ளதாகவும் நிதியமைச்சின் அறிக்கைகள் சுட்டிக்காட்டுகின்றன.

அப்போதைய காலப்பகுதியில் ரூபாவின் பெறுமதி 58 வீதத்தால் வீழ்ச்சியடைந்தமையே இந்த நிறுவனங்களின் நட்டம் அதிகரிப்பதற்கு முக்கிய காரணமாகவும் அமைகின்றது.

நாடு முழுவதும் 527 அரச நிறுவனங்கள் இயங்கிவருகின்றன. அந்த நிறுவனங்களில் 290 நிறுவனங்களின் கணக்கறிக்கை தொடர்பில் விசாரணைகள் இடம்பெற்று வருவதுடன், ஏனைய நிறுவனங்கள் தமது வருடாந்த கணக்கறிக்கையைக் கூட இன்னும் சமர்ப்பிக்கவில்லை என்றும் வசந்த அத்துக்கோரள மேலும் தெரிவித்தார்.

### பரீட்சை காலத்தில்...

பரீட்சைக்கு தோற்றுவதற்காக, மின் துண்டிப்பின்றி தொடர்ச்சியாக மின் விநியோகத்தை மேற்கொள்ளுமாறு மின்சார சபைக்கும் மின் விநியோகிக்கும் தனியார் நிறுவனங்களிடமும் கோரிக்கை முன்வைத்துள்ளதாகவும், அதற்கு அவர்கள் சாதகமான பதிலை வழங்கியுள்ளதாகவும் பரீட்சை ஆணையாளர் நாயகம் எச்.ஜே.எம்.சி. அமித் ஜெயசுந்தர தெரிவித்தார்.

உயர்தர பரீட்சைக் குறித்து ஊடகங்களுக்கு விளக்கமளிக்கும்போதே இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

2022ஆம் ஆண்டு இடம்பெறவிருந்த உயர்தரப் பரீட்சை இம்மாதம் 23ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் பெப்ரவரி மாதம் 17ஆம் திகதிவரையில் 22 நாட்களுக்கு இந்தப் பரீட்சை இடம்பெறவுள்ளது. உயர்தரப் பரீட்சைக்கு 2 இலட்சத்து 78 ஆயிரத்து 196 பாடசாலை பரீட்சார்த்திகளும் 53 ஆயிரத்து 510 பிரத்தியேக பரீட்சார்த்திகளும் தோற்றவிருக்கின்றனர். மொத்தமாக 3 இலட்சத்து 31 ஆயிரத்து 709 பரீட்சார்த்திகள் பரீட்சைக்கு தோற்றவிருக்கின்றனர்.

பரீட்சையை நடத்துவதற்கான சகல நடவடிக்கைகளையும் ஏற்பாடு செய்திருக்கின்றோம். பரீட்சை இடம்பெறும் காலக்கட்டத்தில் மாணவர்கள் எந்தவொரு இடையூறுமின்றி பரீட்சைக்கு தோற்றுவதற்காக, மின் துண்டிப்பின்றி தொடர்ச்சியாக மின் விநியோகத்தை மேற்கொள்ளுமாறு மின்சார சபைக்கும் மின் விநியோகிக்கும் தனியார் நிறுவனங்களிடமும் கோரிக்கை முன்வைத்துள்ளோம். பரீட்சை இடம்பெறும் காலப்பகுதியில் தொடர்ச்சியான மின் விநியோகத்தை வழங்குவதாக அவர்கள் சாதகமான பதிலையும் வழங்கியிருக்கிறார்கள். அதற்கமைய மாணவர்கள் எந்தவொரு இடையூறுமின்றி பரீட்சைக்கு தோற்றுவதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்துள்ளோம்.

இந்த பரீட்சை இந்த மாணவர்களுக்கு மிக முக்கியமானதாகும். ஆகவே, இதுதொடர்பில் நாட்டு மக்கள் மிக அவதானத்துடன் செயற்பட வேண்டியது அவசியமாகும்.

தேர்தல் நடவடிக்கைகள் தொடர்பிலும் தேர்தல் ஆணைக்குழுவின் தலைவரிடமும் பேச்சுவார்த்தை நடத்த எதிர்பார்த்திருக்கிறேன். இந்த பரீட்சை இடம்பெறும் காலப்பகுதிகளில் தேர்தலுக்கான திகதி அறிவிக்கப்படமாட்டாது என்று நம்புகிறோம். இருந்தபோதும் வேட்புமனு தாக்கல்களின்போது மாணவர்களுக்கு பாதிப்பு ஏற்படுக்கூடிய வாய்ப்புகள் குறித்தும் கலந்துரையாடி வருகிறோம். மேலும், வேட்புமனு தாக்கல் முன்னெடுக்கப்பட்டதன் பின்னர் கூட்டங்கள், ஒன்றுகூடல்களை மாணவர்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் செயற்படுமாறு வேட்பாளர்களிடம் கோருகிறோம் என்றார்.

### ஓமானிலிருந்து...

தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், ஓமானில் உள்ள பாதுகாப்பு மையத்தில் 117 இலங்கை பெண்கள் தடுத்துவைக்கப்பட்டிருந்த நிலையில், அவர்களில் 17 பேரை இலங்கைக்கு அனுப்புவதற்காக ஓமானின் மஸ்கட் விமான நிலையத்துக்கு அழைத்து வரப்பட்டனர்,

அவர்களில் இருவரின் ஆவணங்களில் காணப்பட்ட குறைபாடுகள் காரணமாக மஸ்கட் விமான நிலையத்தால் அவர்களது பயணம் நிராகரிக்கப்பட்டது. இந்நிலையில், மீண்டும் பாதுகாப்பு மையத்திற்கு அவர்கள் அனுப்பிவைக்கப்பட்டதுடன், ஏனைய 15 பேரும் நாட்டுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

# அரசியல்வாதிகளின் செயற்பாடுகள் வெறும் பேச்சளவில் மட்டுப்படுத்தப்பட்ட நிலை!

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் சாடல்



வங்குரோத்து நிலையில் உள்ள நமது நாட்டில் 220 இலட்சம் மக்கள் தமது பிரச்சினைகளுக்கு ஆட்சியாளர்களிடம் தீர்வைக் கேட்டு நின்றாலும், தற்போதைய அரசாங்கம் அந்தப் பிரச்சினைகளுக்கு எந்தத் தீர்வையும் வழங்கவில்லை எனவும், அரசாங்கம் போலவே சில கட்சி அரசியல் தரப்பினரும் தமது அரசியல் மேடைகளிலும், மாநாடுகளிலும், ஊடகவியலாளர் சந்திப்புகளிலும் பல்வேறு விமர்சனக் குரலை எழுப்பிக் கொண்டு இருந்தாலும் இறுதியில் அவை வெறும் பேச்சுகளாகவே மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாகவும் பிரயோக ரீதியாக நடைமுறைக்கு வந்த பாடில்லை எனவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

ஐக்கிய வரிசைப்படுத்தல் படையணியின் களுத்துறை மாவட்ட மாநாடு நேற்று (15) எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண பணம், வளங்கள் மற்றும் அந்நிய செலாவணி தேவைப்பட்ட போதிலும், தற்போதைய அரசாங்கத்தால் மக்களின் கோரிக்கைகளுக்குத் தேவையான பொருட்கள் விநியோகத்தைக் கூட வழங்க முடியவில்லை எனவும், அவர்கள் இயலுமையற்றவர்கள் என்பதால், பல்வேறு சந்தர்ப்பங்களில் அரசாங்கத்தில் சேருமாறு கேட்டுக்கொள்ளப்பட்டபோதும், கொள்கையளவில் அதை தாம் நிராகரித்ததாகவும், சுவாரஸ்யமான, வேடிக்கையான, ஆர்வத்தைத் தூண்டும் பேச்சுகளைக் கூறும் நபர்களை விட நடைமுறை ரீதியாக மக்களுக்கு சேவையாற்றுபவரே இவ்வேளையில் நாட்டுக்கு தேவை என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

2015இல், சுனாமி நிவாரண நிதியைத் திருடியவரை நாட்டின் ஆட்சியாளராக மாற்றுவதற்கு அவர்களும் ஒன்றே இவர்களும் ஒன்றே எனக்கூறும் தரப்பே உதவியதாகவும், அதை மக்கள் மறந்து விடவில்லை எனவும், அரச அதிகாரம் இல்லாவிட்டாலும் மக்களுக்கு சேவையாற்றும் போது தம்மை கேலி செய்பவர்களை, அதிகாரம் இல்லாவிட்டாலும் தன்னுடன் போட்டியாக மக்களுக்கு சேவை செய்ய முன்வாருங்கள் என அழைப்பு விடுப்பதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவித்தார்.

மக்களின் பிரச்சினைகளை வார்த்தைகளை விட செயலால் யாரால் தீர்க்க முடியும் என்பதை மக்கள் தங்கள் அறிவாற்றலால் தீர்மானிக்க வேண்டும் எனவும், தான் ஆங்கில மொழியைக் கையாளும் விதத்தை அவமதிக்காமல் மக்களுக்குச் சேவை செய்யுமாறு கோரிக்கை விடுத்த எதிர்க்கட்சித் தலைவர், தனக்கும் தனது குழுவிற்கும் அரசியல் அதிகாரத்தை மக்கள் வழங்கினால் உலகிற்கு சுமையின்றி வாழ்வதற்குத் தேவையான சூழலை உருவாக்கித் தருவதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்நேரத்தில் நம் நாட்டுக்கு தேவைப்படுவது டொலர்கள், யூரோக்கள் மற்றும் பவுண்கள் எனவும் அதற்கான நடைமுறை வேலைத்திட்டமொன்று தேவை எனவும், 74 வருட வரலாற்றில் இந்நாட்டில் எந்த எதிர்க்கட்சியும் செய்யாத பணியை தற்போதைய எதிர்க்கட்சி செய்திருப்பதனால், மக்கள் இது குறித்து புத்திசாலித்தனமாக சிந்தித்து அடுத்த தேர்தலில் முடிவெடுக்க வேண்டும் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவித்தார்.

ஐக்கிய வரிசைப்படுத்தல் படையணி என்பது ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்த ஒரு தனித்துவமான அமைப்பாகும் என்பதோடு, அதன் தலைவராக நாடாளுமன்ற உறுப்பினர் ஹேஷா விதானகே செயற்படுகின்றார்.

# அரசியல்வாதிகள் வாக்குக் கேட்டு வந்தால் செருப்படி

## வலி. வடக்கு மக்கள் எச்சரிக்கை

அரசியல்வாதிகள் யாராவது வாக்குக் கேட்டு வந்தால் செருப்பைக் கழற்றி அடிப்போம் என வலி. வடக்கு மக்கள் ஆக்ரோஷமாக எச்சரித்துள்ளனர்.

இதேவேளை அங்கஜன் இராமநாதன் வழங்கிய வாக்குறுதிக்கு என்ன நடந்தது எனவும் மீள்குடியேற்றப்படாத பலாலி வடக்கு மக்கள் கேள்வியெழுபபியுள்ளனர்.

32 வருடங்களுக்கு மேலாக இராணுவத்தினர் உள்ளிட்ட படைப் பிரிவினர் உயர் பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் அடாத்தாக பிடித்து வைத்துள்ள தமது காணிகளை உடனடியாக விடுவிக்க வேண்டுமென வலியுறுத்தி பலாலி மருதடி அம்மன் ஆலயத்தில் (பலாலி வடக்கு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை முன்பாக) வலி. வடக்கு மக்கள் நேற்று முந்தினம் திடீரென போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்தப் போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் தமிழ் அரசியல்வாதிகளை கடுமையாக விமர்சித்தனர். அத்தோடு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பொங்கல் பரிசாக தமது காணிகளை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் என்றும் உருக்கமாக கோரிக்கை விடுத்தனர். சொந்தக் காணி கண் முன்னே இருந்தும் அகதிகளாக ஆட்டுக்கொட்டிலில் வாழ்ந்து வருவதாகவும் அடிமைகளாக வாழ வேண்டிய அவசியம் தமக்கு இல்லை என்றும் அவர்கள் குறிப்பிட்டனர்.

### 13 ஆவது...

முன்னெடுக்க வேண்டும்.

தமிழர் பிரச்சினை குறித்து நாங்கள் பேசி வருகிறோம். நாடாளுமன்றத்தில் உள்ள அனைத்துக்கட்சி பிரதிநிதிகளை அழைத்து மீண்டும் நல்லிணக்கத்தை ஏற்படுத்த கோரிக்கை முன்வைத்தேன். தமிழ்க்கட்சிகளின் தலைவர்களுடன் மீண்டும் பேசவுள்ளேன். இந்த பிரச்சினைகளை ஒதுக்கி பிற்போட்டு நாம் முன்னோக்கி செல்ல முடியாது. தீர்வு என்ன என்பதை நாடாளுமன்றுக்கு கூறி மக்களுக்கு கூறவுள்ளேன்.

காணமல் போனோர் தொடர்பில் ஆராயப்பட்டு அவர்களின் உறவுகளுக்கு நீதி வழங்க வேண்டும். இந்த விடயத்தில் எமக்கு படைத்தரப்பு ஒத்துழைப்பு வழங்க தயார். நாம் உண்மையை கண்டறிய வேண்டும். பயங்கரவாத தடைச் சட்டத்திற்கு பதிலாக வரும் சட்டம் வடக்கிற்கு மட்டுமல்ல, தெற்கிற்கும் பொதுவானது. காணிகளை இழந்தோருக்கு அவற்றுக்கு தீர்வை வழங்க வேண்டும். சுவீகரித்த காணிகளை மீள வழங்க இராணுவம் ஒத்துக்கொண்டுள்ளது. அவற்றை விரைவில் செய்வோம்.

13 ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்தவுள்ளோம். வடக்கிற்கு மட்டுமல்ல, தெற்கிலும் இதற்கு கோரிக்கை விடுக்கப்படுகிறது. அங்கு முதலமைச்சர்கள் கோருகின்றனர். இவை பற்றி பேசுவோம். அடுத்த 2 வருடங்களில் படிப்படியாக இவற்றை செய்வோம். வறுமை, பட்டினி, வேலைவாய்ப்பின்மை அனைத்து மக்களுக்கும் இருக்கிறது. ஒன்றாக இவற்றை வெல்ல வேண்டும். மலையக மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளுடன் விரைவில் பேசவுள்ளேன். அந்த மக்களுக்கும் இதர சமூகத்தின் உரிமைகள் வழங்கப்படவேண்டும். வெளிநாட்டு செலாவணியை ஈட்டித்தரும் மக்களின் உரிமைகளை வழங்க வேண்டும். அதன் பின்னர் முஸ்லிம் மக்களின் பிரச்சினைகளை தீர்க்க அந்த சமூக பிரதிநிதிகளுடனும் பேசவேண்டும் - என்றார் ரணில்.

### ரூ.பத்து கோடி வழங்க...

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட அதிகாரிகள் தவறு செய்தால் அதற்கு ஜனாதிபதியும் பொறுப்பு என்று உயர் நீதிமன்ற தீர்ப்பில் எழுதப்பட்டுள்ளது. பொலிஸ்மா அதிபர் மற்றும் பாதுகாப்பு செயலாளர் ஆகியோரை ஜனாதிபதி நியமிக்கும் நிலையில், அவர்கள் அந்த பொறுப்பை நிறைவேற்றாததற்கு நானும் பொறுப்பு என்று சொல்லப்பட்டுள்ளது.

இந்த நாட்டின் முன்னாள் ஜனாதிபதி, அமைச்சர், நாடாளுமன்ற உறுப்பினர் மற்றும் பிரஜை என்ற வகையில் நான் சட்டத்தையும் நீதித்துறையையும் மதிக்கிறேன். நீதிமன்ற தீர்ப்புக்கு தலைவணங்குகிறேன். அதில் எந்த பிரச்சனையும் இல்லை.

ஈஸ்டர் சம்பவத்தின் போது நான் வெளிநாட்டில் இருந்தேன் என்பது அனைவருக்கும் தெரியும். நான் இலங்கைக்கு திரும்பி வந்த நாள் முதல், ஜனாதிபதியாக இருந்த காலத்திலும், நாடாளுமன்றத்திலும், பல்வேறு இடங்களிலும், பாதுகாப்பு அதிகாரிகளுக்கு அந்தச் சம்பவம் குறித்து தகவல் கிடைத்தாலும் அந்த அதிகாரிகள் யாரும் அதை எனக்குத் தெரிவிக்கவில்லை என நான் பலமுறை கூறி உள்ளேன்.

உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி உட்பட ஏழு நீதிபதிகள் அளித்த தீர்ப்பில் 85 பக்கங்கள் எழுதப்பட்டுள்ளன. இந்த 85 பக்கங்களில், அதிகாரிகளுக்கு தகவல் கிடைத்திருந்தாலும், முன்னாள் ஜனாதிபதிக்கு எந்த விதத்திலும் தெரியாமல் இருந்ததாக கூறப்படுகிறது. அதாவது ஈஸ்டர் தாக்குதல், புலனாய்வுப் பிரிவினர், பாதுகாப்புத் திணைக்களம், பொலிஸ் மா அதிபர், பாதுகாப்புச் செயலாளர், கொழும்பு மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர், பொலிஸ் நிலைய பொறுப்பாளர்கள் என இவர்கள் அனைவருக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. இது குறித்து ஜனாதிபதிக்கு தெரிவிக்கப்படவில்லை என்பது நீதிமன்றத்தின் 85 பக்க தீர்ப்பில் தெளிவாக உள்ளது.

மனித உரிமை மீறல் தொடர்பாக எனக்கு எப்படி 10 கோடி கொடுக்க முடிவு செய்தார்கள் என்று இப்போது நீங்கள் நினைக்கலாம்.

10 கோடி இழப்பீடு கொடுக்கும் அளவுக்கு என்னிடம் பொருளாதாரம் இல்லை. அது பற்றிய உண்மைகளை நான் கூறமாட்டேன். இது தொடர்பாக நானும் எனது நண்பர்களும் எங்கள் நெருங்கிய நண்பர்களிடம் பணம் வசூலிக்க முடிவு செய்துள்ளோம். ஆனால், நான் கொழும்பு கோட்டை அரசமரத்தின் கீழ் உண்டியல் குலுக்குவோமா என்று கேட்டேன். ஆனால் எனது அன்பான நண்பர்கள் பலர் என்னிடம், உங்களிடம் வருமான ஆதாரங்கள் இல்லை. அதனால் உங்கள் பொருளாதாரம் எப்படி இருக்கிறது என்று எங்களுக்குத் தெரியும் என்றனர்.

ஒவ்வொரு ஆண்டும் எனது சொத்து குறித்து நாடாளுமன்றத்தில் அளித்து வருகிறேன். ஜனாதிபதியாக பதவியேற்ற பின்னர் பல ஜனாதிபதிகள் தமது சொத்துகளை அறிவிக்கவில்லை. அதற்குக் காரணம் அவர்கள் ஜனாதிபதிகள். நான் ஜனாதிபதியாக இருந்த ஐந்தாண்டுகளில், ஒவ்வொரு ஆண்டும் எனது சொத்து அறிக்கையை அளித்து வருகிறேன். எனது சொத்து அறிக்கையை யார் வேண்டுமானாலும் பார்க்கலாம். தகவல் அறியும் சட்டத்தின் கீழ் எனது சொத்து அறிக்கை கிடைத்தால் யார் வேண்டுமானாலும் அதை எடுக்கலாம்.

எனவே, எனது நண்பர்கள் முடிவெடுத்தபடி, இதற்கு எனது நண்பர்களிடமிருந்து தேவையான ஆதரவைப் பெறுவேன் என்று நம்புகிறேன்.


அஷ்ட லோக தம்மம் உங்களுக்குத் தெரியும். எனவே, யார் வேண்டுமானாலும் ராஜாவாகலாம். பிச்சைக்காரனாகவும் இருக்கலாம். அவர்களில் எவரேனும் தன் வாழ்நாளில் ஆதாயமும் நஷ்டமும் அவமானமும் புகழும் பெறுவார்கள். அதன்படி, மனிதாபிமானத்துடன் வாழ்ந்து எமது நாட்டுக் குழந்தைகளுக்கு நல்ல ஒழுக்கம் மிக்க சமுதாயத்தை உருவாக்க என்னால் இயன்ற சிறந்த சேவையை செய்வேன் என உறுதியளிக்கின்றேன் - என்றார் மைத்ரி

### ஜனாதிபதிக்கு எதிராக...

தேசிய தைப்பொங்கல் விழா இடம்பெறவுள்ள நல்லூர் பகுதியை சுற்றிலும் வீதிதடைகள் ஏற்படுத்தப்படுவதற்கான முன்னேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

ஜனாதிபதி வருகைக்கு எதிர்ப்பு தெரிவித்து இந்த போராட்டத்திற்கு யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அழைப்பு விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது





# யாழ்ப்பாணத்தில் நடந்த சமய நிகழ்வுகளில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பங்கேற்பு







அரச தைப்பொங்கல் விழாவில் பங்கேற்பதற்காக யாழ்ப்பாணம் சென்றுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று (15) காலை யாழ்ப்பாணம் ஸ்ரீ நாகவிகாரைக்குச் சென்று சமய வழிபாடுகளில் ஈடுபட்டு ஆசி பெற்றார்.

அதன்பின்னர் யாழ்ப்பாணம் ஸ்ரீ நாக விகாராதிபதி வணக்கத்துக்குரிய மீகஹஜந்துரே சிரிவிமல நாயக்க தேரரைச் சந்தித்து நலம் விசாரித்த ஜனாதிபதி, அவரின் உடல்நலன் குறித்தும் கேட்டறிந்ததோடு, சிறிது நேரம் அவருடன் உரையாற்றினார். அதனைத் தொடர்ந்து நாயக்க தேரர் உள்ளிட்ட மகாசங்கத்தினரால் செத்பிரித் பாராயணம் செய்து ஜனாதிபதிக்கு ஆசி வழங்கப்பட்டது.

"பௌத்த இந்து சமய மன்றம்" சார்பில் ஜனாதிபதியை அதன் தலைவர் கலாநிதி எம்.மோகன் வரவேற்றார்.

இதேவேளை, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமியை சந்தித்து ஆசி பெற்றார்.

அடுத்து யாழ். ஆயர் இல்லத்திற்கு விஜயம் செய்த ஜனாதிபதி, யாழ். ஆயர் கலாநிதி ஜஸ்டின் ஞானப்பிரகாசம் ஆண்டகையை சந்தித்து சிறிது நேரம் கலந்துரையாடினார்.

இந்த நிகழ்வில் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இராஜாங்க அமைச்சர் கலாநிதி சுரேன் ராகவன், ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் விக்கும் லியனகே உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.

# கொழும்பு மாநகர முதல்வர் பதவிக்கு போட்டியிட முஜிபுர் ரஹ்மான் தெரிவு

## ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் முன்மொழிவு

கொழும்பு மாநகர முதல்வர் பதவிக்கு ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் போட்டியிடுவதற்காக நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாச தலைமையில் கட்சியின் செயற்குழு நேற்று முன்தினம் (14) கூடியபோதே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

கொழும்பு மாநகர முதல்வர் வேட்பாளராக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவால் முஜுபுர் ரஹ்மானின் பெயர் முன்மொழியப் பட்டதுடன், அனைத்து செயற்குழு உறுப்பினர்களாலும் ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டது.

இந்நிலையில், கொழும்பு மாநகர முதல்வர் பதவிக்கு போட்டியிடுவதற்காக தமது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து முஜிபுர் ரஹ்மான் விலகவுள்ளார்.

முஜிபுர் ரஹ்மான் எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடவுள்ள நிலையில், அவருடைய நாடாளுமன்ற ஆசனம் விருப்பு வாக்குகளின் அடிப்படையில் அடுத்த வரிசையில் இருக்கும் ஏ.எச்.எம்.பௌசி அல்லது ஹிருணிகா பிரேமச்சந்திரவால் நிரப்பப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.



இந்நிலையில், கொழும்பு மாநகர முதல்வர் பதவிக்குப் போட்டியிடும் முஜிபுர் ரஹ்மானுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா வாழ்த்துகளைத் தெரிவித்துள்ளார்.

முஸ்லிம் சமூகம், தமக்காக மிகவும் உரத்துப்பேசும் பேச்சாளரைத் தவறவிடும். எனினும், அவர் வெற்றி பெறுவார் என்பதில் எமக்கு நம்பிக்கை உள்ளதென அவர் தனது ட்விட்டர் பக்கத்தில் தெரிவித்துள்ளார்.





உழவர் திருநாளான தைப்பொங்கல் நிகழ்வுகள் வவுனியாவிலுள்ள இந்து ஆலயங்களிலும், வீடுகளிலும், வர்த்தக நிலையங்களிலும் பட்டாசு முழங்க சிறப்பாக இடம்பெற்றது. வவுனியாவிலுள்ள சிறப்பு வாய்ந்த இந்து ஆலயங்களில் ஒன்றான குருமன்காடு காளி கோவிலில் ஆலய பிரதம குரு தலைமையில் புத்தரிசியிட்டு தைப்பொங்கல் நிகழ்வு இடம்பெற்றது . இதுபோல் வவுனியாவிலுள்ள இந்து, கிறிஸ்தவ ஆலயங்கள் பலவற்றில் தைப்பொங்கல் சிறப்பாக இடம்பெற்றது. (வவுனியா நிருபர் திவ்யா)



**சீன கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய குழுவின் சர்வதேச திணைக்களத்தின் பிரதி அமைச்சர் சென் சோவ் இலங்கைக்கான பயணமொன்றை மேற்கொண்டுள்ளதாக கொழும்பிலுள்ள சீனத் தூதரகம் தெரிவித்துள்ளது. சீனப் பிரதிநிதிகள் ஜனவரி 18ஆம் திகதிவரை நாட்டில் தங்கியிருப்பார்கள்.**

# தினசரி பலாபலன்கள்

**சுபகிருது வருடம் தை மாதம் 02ஆம் நாள் திங்கட்கிழமை**

**மேஷம்:** காதல், திருமணம் கைகூடி வரும். பங்கு வியாபாரத்தில் வெற்றியுடன் அதிக இலாபம் கிடைக்கும்.

**ரிஷபம்:** நினைத்த காரியத்தில் வெற்றி, நோய், கடன் நிவர்த்தி, எதிரிகளை வெற்றி கொள்வீர்கள்.

**மிதுனம்:** உங்களது மனக்குறையை மற்றவர்கள் தீர்த்து வைப்பார்கள். உடல் நலம் கவனம் வேண்டும்.

**கடகம்:** குடும்பத்துடன் சந்தோஷமாக இருப்பீர்கள், உணர்வுகளைக் கட்டுப்படுத்திக்கொள்ளவும்.

**சிம்மம்:** காரியங்களில் வெற்றி கிடைக்கும், புதிய துணிமணிகள் வாங்கி அணிவீர்கள்.

**கன்னி:** குதர்க்கமான பேச்சுகள் வேண்டாம். பணம், பொருள் கைமாறும் போது கவனமாக செயல்படவும்.

**துலாம்:** நண்பர்கள் சந்திப்பால் நல்ல பலன் கிடைக்கும். உடல் நலம் சிறப்பாக அமையும்.

**விருச்சகம்:** செலவுகளைக் கட்டுப்படுத்திக் கொள்ளவும். எதிர்பாராத உடல் காயங்கள் ஏற்படலாம்.

**தனுசு:** வியாபாரத்தில் மேன்மை உண்டு, கைவிட்டுப்போனவை திரும்பக் கிடைக்கும்.

**மகரம்:** தொழில் வியாபாரங்கள் சிறக்கும், உங்கள் கீர்த்தி செல்வாக்கு உயரும்.

**கும்பம்:** திட்டமிட்ட பிரயாணத்தால் நன்மை உண்டு, புதிய நண்பரை சந்திப்பீர்கள்.

**மீனம்:** வீண் பணவிரயம் ஏற்படும், கோபத்தால் பொறுமை இழந்து விடாதீர்கள்.

| | |
|---|---|
| திதி: | நவமி இரவு 7.20 வரை பின் தசமி (தேய்பிறை) |
| நட்சத்திரம்: | சுவாதி இரவு 7.23 வரை பின் விசாகம் |
| யோகம்: | அமிர்தம் (சுப காரிய நன்மை) |
| வார சூலை: | வடமேற்கு திசை நோக்கி சுப காரியம் கூடாது |
| நல்ல நேரம்: | பி.ப.12.33 மணிமுதல் 1.33 மணிவரை |
| ராகு காலம்: | 8.03 மணிமுதல் 9.33 மணிவரை |
| எமகண்டம்: | 11.03 மணிமுதல் 12.33 மணிவரை |
| குளிகை: | 2.03 மணிமுதல் 3.33 மணிவரை |
| சந்திராஷ்டமம்: | மீனராசியினர் எச்சரிக்கையாக செயல்படவும் |
| விசேட தினம்: | பட்டிப் பொங்கல் |

**கணிப்பு : சிவா பாஸ்கரராவ்**
(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்)
ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.
தொலைபேசி : 077-0525325
078-6759739

# பெயர் மாற்றம்

நுவரெலியா மாவட்ட அம்பகமுவ பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள காட்டு மஸ்கெலியா குரூப், மஸ்கெலியா தோட்ட கிராம உத்தியோகத்தர் பிரிவு 320.A பிரிவில் வசிக்கும் அடையாள அட்டை இலக்கம் 942163398 V பிறப்பு சான்றிதழ் இலக்கம் 2765 ஜயசேகர் கவிபிரசாத் ஆகிய நான் இன்று முதல் எனது பெயரை ஜயசேகர் கவிபிரசாந்த் என திருத்தம் செய்து உள்ளேன் என்பதை இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசுக்கும் இலங்கை வாழ் மக்களுக்கும் இத்தால் அறிய தருகிறேன்.

**கையொப்பம்: ஜயசேகர் கவிபிரசாந்த்**

# 'சீதாவாக்க ஒடிஸி' ரயில்சேவை ஆரம்பம்



சுற்றுலாத்துறையை மேம்படுத்தும் நோக்கில் புகையிரதத் திணைக்களத்தினால் இயக்கப்படும் 'சீதாவாக்க ஒடிஸி' சிறப்பு ரயில் நேற்று (15) காலை கொழும்பு கோட்டையிலிருந்து தனது பயணத்தை ஆரம்பித்துள்ளது.

கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்திலிருந்து வக புகையிரத நிலையம் வரை பயணிக்கும் புகையிரதம், பிற்பகல் கொழும்பு கோட்டைக்குத் திரும்பும் ரயிலின் முதல் ஓட்டத்தில் போக்குவரத்து அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன உள்ளிட்ட குழுவினரும் கலந்துகொண்டனர்.


# வெற்றி நிச்சயம்

"உங்கள் பிரச்சினை எதுவானாலும் ஒருமுறை என்னை தொடர்பு கொண்டால், 100% வெற்றி நிச்சயம்" நடக்காத காரியங்களையும் நடத்திவைக்கும் சக்தி என்னிடம் மட்டுமே உண்டு. என்னை நம்புங்கள். பணப்பிரச்சினை, தொழில் முடக்கம், வியாபார மந்தம், கடன் தொல்லை, முன்னேற்றத்தடை, திறமையிருந்தும் வாழ்க்கையில் முன்னேற முடியாமை, நினைப்பது ஒன்று நடப்பது ஒன்றாக இருத்தல், எதிலும் தோல்வி, எதிரித்தொல்லை, தீராதநோய், போதைவஸ்துப்பாவனை, வழக்கில் வெற்றிபெற, போட்டி பந்தயங்களில் ஜெயிக்க, வெளிநாடுசெல்ல, விற்கப்படாத வீடு/காணி/வாகனம் விற்க, கொடுத்த பணம் திரும்பி வர, படிப்பில் மந்தம், விவாகரத்தை தடுக்க, கணவன்-மனைவி பிரச்சினை, காதல் பிரச்சினை, பிரிந்தவர் ஒன்றுசேர, திருமணத்தடை, குழந்தையின்மை மற்றும் உங்கள் சகல பிரச்சினைகளுக்கும் 48 மணித்தியாலங்களுக்குள் 100% நிரந்தரத் தீர்வை பெற்றுக்கொடுப்பேன் என்று உத்தரவாதம் அளிக்கிறேன்.

உலகப் புகழ்பெற்றவரும் இலங்கையில் நம்பர் 1 மலையாள மாந்திரீக ஜாம்பவான், தத்துவஞானி, மகரிஷி, தேசபந்து, கௌரவ கலாநிதி.

e b a j b . ஸ்ரீமத் சுவாமிஜி–0710192687
h t hh


# இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு

(2002 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு சட்டத்தின் 17 வது பிரிவின் கீழான பொது அறிவிப்பு)

## உத்தேசிக்கப்பட்டுள்ள மின்சாரக் கட்டணம் 2023 பொது ஆலோசனை கேட்டல்

2009 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க இலங்கை மின்சாரச் சட்டத்தின் 30 ஆவது பிரிவின் கீழ், உரிமதாரரால் (இலங்கை மின்சாரசபை) 2023 ஆம் ஆண்டிற்கான உத்தேசிக்கப்பட்ட மின்சாரக் கட்டணத்தைப் பற்றிய பொது ஆலோசனை கேட்டலை நடத்துவதற்கான முடிவை இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு இதன் மூலம் அறிவிக்கிறது.

விநியோக உரிமதாரரால் முன்மொழியப்பட்ட கட்டணத்தை அமுல்படுத்துவதன் மூலம் தனது வருமானம் 66.2% ஆக உயருமென முன்மொழியப்பட்டுள்ளது.

**தொடர்பில் ஏற்பட்ட பாதிப்புகள் அல்லது ஏதேனும் சிக்கல்கள் அல்லது தகவல்கள் இருந்தால் எழுத்துமூல சமர்ப்பிப்புகளை சமர்ப்பிக்குமாறு பங்குதாரர்கள் மற்றும் பொது மக்கள் இத்தால் அழைக்கப்படுவதுடன் தேவை ஏற்படின் அத்தகவல்கள் குறித்து சம்பந்தப்பட்டவர்களை நேரில் வரவழைத்து வாய்மொழி அறிக்கைகளைப் பெறவும் ஆணைக்குழு பரிசீலிக்கும்.**

2002 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் 17ஆம் பிரிவின்கீழ் ஆணைக்குழுவிற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் கீழ் நடத்தப்படும் இந்த பொதுமக்கள் ஆலோசனை கேட்பு நிகழ்வுக்கான திகதி, நேரம் மற்றும் இடம் போன்ற விபரங்களை பத்திரிகை மூலமாகவும் ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ வலைத்தளத்தின் வாயிலாகவும் (www.pucsl.gov.lk) உரிய நேரத்தில் இதே போன்ற அறிவித்தல் மூலம் பொதுமக்களுக்கு அறியத்தரப்படும்.

**ஆலோசனை பத்திரத்தை www.pucsl.gov.lk இல் பார்வையிடலாம்.**

இந்த அறிவிப்பின் திகதியிலிருந்து 21 நாட்களுக்குள் எழுதப்பட்ட சமர்ப்பிப்புகள் ஏதேனும் இருப்பின்:

சமர்ப்பிப்புக்கும்முறை:

இணையதளம் : www.pucsl.gov.lk
மின்னஞ்சல் : consultation@pucsl.gov.lk
முகநூல் : www.facebook.com/pucsl
கடிதம் மூலம் : "உத்தேசிக்கப்பட்டுள்ள மின்சாரக் கட்டணம் 2023 பொதுஆலோசனை கேட்டல்"
இலங்கைப் பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு,
6 வது மாடி, இலங்கை வங்கி வர்த்தகக் கோபுரம்,
இல.28, புனித மைக்கல் வீதி, கொழும்பு 03.

தொலைநகல் : (011) 2392641

மேலதிக தகவல்களுக்கும் தெளிவுபடுத்துவதற்கும் திரு. காஞ்சன சிறிவர்தன அவர்களை (011) 2392607/8 தொடர்பு கொள்ளவும்.

ஆணைக்குழுவின் உத்தரவுப்படி

ஜனக ரத்நாயக்க
தலைவர்
இலங்கைப் பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு

திகதி: 16 ஜனவரி 2023

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

இல. 91. விஜேராம மாவத்தை. கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

2023, ஜனவரி 16ஆம் திகதி, திங்கட்கிழமை

# ரணிலின் ஓட்டம் செல்லும் தூரம்!

சுதந்திர தினத்திற்கு முன்னர் தமிழர்களுக்கு தீர்வொன்றை வழங்குவதாகக் கூறிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அதற்குரிய ஆக்கபூர்வமான ஏற்பாடுகளை செய்வதாகக் காணவில்லை.

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகி அரை வருடம், ஆறு மாதங்கள் உருண்டோடி விட்டன.

பொருளாதாரப் பெருவீழ்ச்சியைச் சந்தித்திருக்கும் நாட்டுக்கு அதிலிருந்து மீட்சி கிட்டுவதான எந்தச் சாதக அம்சமும் தென்படவில்லை. ஆக, பணவீக்கம் எகிறும் வேகம் மட்டுமே சற்றுக் குறைந்திருக்கின்றது. அவ்வளவுதான். அதைவிட உருப்படியாக எதுவும் நடக்கவில்லை.

‘அரகலய’ என்ற மக்கள் எழுச்சிப் போராட்டத்தை இரும்புக்கரம் கொண்டு அடக்கியமையைத் தவிர, வேறு எதனையும் ரணில் விக்கிரமசிங்கவின் அரசு உருப்படியாகச் சாதித்ததாகத் தெரியவில்லை. ‘அரகலய’ போராட்டம் கூட, அடங்கியதாகத் தெரியவில்லை.

நீறுபூத்த நெருப்பாகவே உள்ளது. ரணில் ஆட்சி பீடத்தின் கொள்கைகள், போக்குகள் பொருளாதாரப் பெருவீழ்ச்சியிலிருந்து மீட்சி பெற்றுத் தராமல், மக்களின் நெருக்கடிகள் நீண்டு கொண்டு போகுமானால், அடங்கிக் கிடக்கும் மக்கள் எழுச்சிப் போராட்டங்கள் மீண்டும் கனன்று எழத் தொடங்கினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

ஜனாதிபதியாகப் பதவியேற்றபோது தற்காலிக அமைச்சரவையை அமைப்பதாக அறிவித்த ரணில் விக்கிரமசிங்க, விரைவில் புது அமைச்சரவை பதவியேற்கும் என்றார். ஆனால், ஆறு மாதங்கள் கடந்தும் அது நடக்கவில்லை.

புதிய அமைச்சரவையை அமைக்கப் போனால் அரசியல் குழப்பங்கள் ஏதும் வந்து விடும் என்ற அச்சத்தில், அதனை நாளை, நாளை என்று பிள்ளையார் கல்யாணம் போல தள்ளிப் போட்டு வருகிறார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க என்று விடயமறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

‘கூரை ஏறிக் கோழி பிடிக்க முடியாதவன் வானம் ஏறி வைகுந்தம் போனானாம்’ என்ற கதையாக, அமைச்சரவையை சீரமைக்கும் நடவடிக்கையை எடுக்கத் திராணியற்ற ஜனாதிபதி, நாட்டின் பொருளாதாரத்தை மீட்டுத் தரப் போகின்றார் என்று நம்புவது அர்த்தமற்றது.

இதற்கிடையில், சர்வதேச நாணய நிதியத்தின் நிதியுதவி கிடைப்பது தாமதமாவதன் காரணமாக இலங்கை எதிர்கொள்ளும் நெருக்கடிகள் அதிகரிக்கின்றன என இராஜாங்க அமைச்சா செஹான் சேமசிங்க சர்வதேச நிகழ்வொன்றில் கருத்து வெளியிட்டுள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து அதிகம் எதிர்பார்க்கப்படுகின்ற நிதியுதவியைப் பெற்றுக்கொள்வது தாமதமாவதன் காரணமாக மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் அதிகரிக்கின்றன என்பதை அரசாங்கம் ஏற்றுக்கொண்டுள்ளது என்றும் அவர் கூறியுள்ளார்.

ரணில் விக்கிரமசிங்க அரசின் இயலாமையை ஒப்புக் கொள்ளும் குறிகாட்டி இது.

மறுபுறம் படைகளின் உறுப்பினர்களைக் குறைத்து, பாதுகாப்புத்துறைகளில் பெரும் மாற்றங்களை செய்து சிங்கள இனவாதிகளின் எதிர்ப்பையும் சம்பாதித்து, இப்போது தன்னைத் தாங்கிநிற்கும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் அதிருப்தியையும் சம்பாதித்துக் கொண்டுள்ளார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. எவ்வளவு காலம் இந்த ஓட்டம் செல்லுமென்பதை பொறுத்திருந்து பார்ப்போம்.

## இன்றைய நாளில்..

- 1761 – பிரித்தானியா பாண்டிச்சேரியை பிரான்ஸிடம் இருந்து கைப்பற்றியது.
- 1969 – சோவியத் விண்கலங்களான சோயுஸ்-4, சோயுஸ்-5 ஆகியவை முதல் தடவையாக புவியின் சுற்றுப்பாதையில் விண்வெளி வீரர்களைப் பரிமாறிக் கொண்டன.
- 1991 – அமெரிக்கா, ஈராக் மீது போரை அறிவித்தது. வளைகுடாப் போர் ஆரம்பமானது.
- 1993 – விடுதலைப் புலிகளின் தளபதி கேணல் கிட்டு உட்பட 10 விடுதலைப் புலிகள் வெளிநாடொன்றில் இருந்து இலங்கை திரும்புகையில் சர்வதேசக் கடற்பரப்பில் இந்தியக் கடற்படையால் சுற்றி வளைக்கப்பட்டபோது கப்பலை வெடிக்க வைத்து இறந்தனர்.
- 2003 – கொலம்பியா விண்ணோடம் தனது கடைசிப் பயணத்தை ஆரம்பித்தது. இது 7 விண்வெளி வீரர்களுடன் 16 நாட்களின் பின்னர் பூமிக்குத் திரும்புகையில் வெடித்துச் சிதறியது.
- 2008 – போர் நிறுத்த உடன்படிக்கையிலிருந்து இலங்கை அரசு அதிகாரபூர்வமாக விலகியது.
- 2008 – இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு இலங்கையில் தனது பணிகள் அனைத்தையும் நிறுத்தியது.

# அறமும் நேர்மையும் அடிப்படைத் தேவைகள்!

**பேராசிரியர் க.பழனித்துரை**

மக்களாட்சி பற்றி ஆய்வு செய்கின்ற நிறுவனங்களில் கடந்த முப்பது ஆண்டுகளாக அறம், நேர்மை ஆகிய இரண்டு கருத்தாடல்களும் ஆய்வுப் பொருளாகவும் விவாதப் பொருளாகவும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அதனடிப்படையில் பன்னாட்டு நிறுவனங்கள் மூலம் இந்தக் கருத்தாடல்களை அரசியலுக்குள்ளும் அரசாங்கத்திற்குள்ளும், சமூகத்திற்குள்ளும் புகுத்துவதற்கான முயற்சிகள் நடைபெற்று வருகின்றன.

ஒரு காலத்தில் மக்களாட்சியின் அடிப்படைக் கூறுகளாக, நேர்மை, நீதி, நியாயம், சமத்துவம், பொது ஒழுக்கம் என்பவையெல்லாம் இருந்ததால், மக்களாட்சி நடைபெறும் நாடுகளில் இவை பின்பற்றப்பட்டுவிடும் என்ற எதிர்பார்ப்பு அனைவரிடமும் இருந்தது.

ஆனால், நடைமுறையில் மக்களாட்சி என்பதை தேர்தல் என்ற ஒற்றைப்புள்ளிக்குள் கொண்டு வந்துவிட்டோம். தேர்தலைத் தாண்டி எந்த மக்களாட்சிக் கூறுகளையும் நடைமுறைக்குக் கொண்டுவரவில்லை. அதன் விளைவாக ஊழல் மலிந்த ஆட்சியைத்தான் பல நாடுகளில் பார்க்க முடிந்தது. அந்த ஊழலும் கரைபுரண்டு ஓடுவதால், மக்களின் மேம்பாட்டிற்காக பல நாடுகளுக்கு கடன் தந்த உலக வங்கியே ஓர் ஆய்வு நடத்தியது. அதன் முடிவில், மோசமான ஆளுகைதான் நாட்டில் நிலவும் ஊழலுக்கு ஊற்றுக்கண்ணாக விளங்குகிறது என்பதைக் கண்டறிந்தது.

அந்த ஆய்வின் அடிப்படையில் ஒரு நாட்டில் நல் ஆளுகையை (குட் கவர்னன்ஸ்) எப்படிக் கொண்டு வருவது என்று சிந்தித்தது. அதற்கு நல் ஆளுகை என்றால் என்ன என்பதை முதலில் வரையறை செய்தது உலக வங்கி. நிதி நிர்வாகம் முறையாகச் செய்யப்படும் நாட்டை நல் ஆளுகை நாடு என வரையறை செய்தது.

உலக வங்கி வழங்கும் நிதியை ஒரு நாடு முறையாகப் பயன்படுத்தவில்லையானால், உலக வங்கி அந்த நிதியை எப்படித் திரும்பப் பெற முடியும் என்ற கேள்வி எழுந்தது. இதுபோல் பல நாடுகளும் செய்ய ஆரம்பித்தால் உலக வங்கி என்ன ஆகும் என்று சிந்தித்து இந்த வரையறையைக் கொண்டு வந்தது.

அது மட்டுமல்ல, இந்த விவாதத்தை முன்னெடுக்க ஆய்வு நிறுவனங்களுக்கு உலக வங்கி நிதியும் அளித்தது. அப்போது உலகம் முழுவதும் நல் ஆளுகை பற்றி விவாதம் நடந்தது. அந்த நேரத்தில் ஐ.நா.சபை, ‘‘நல் ஆளுகை என்பது நிதி சம்பந்தப்பட்டது மட்டுமல்ல, மக்கள் நலன் சம்பந்தப்பட்டதும்தான். மக்கள் நலனைப் பாதுகாப்பதும் மேம்படுத்துவதும்தான் நல் ஆளுகையாகும்’’ என்று கூறியது. இதனால் புது விவாதம் தோன்றியது.

அந்த விவாதம், ‘‘உலகில் சமத்துவம் என்பதை முன்னெடுக்க இனிமேல் சாத்தியக்கூறு குறைவு. ஏனென்றால், ஏற்றத்தாழ்வு என்பது கூடிக்கொண்டே போகிறது. அதைத் குறைக்க இன்னும் வழிமுறை காணப்படவில்லை. அதற்கு மாறாக நல் ஆளுகை மூலம் குறைந்தபட்சமாக மக்களுக்கு அரசு செய்து தரவேண்டிய சேவைகளைச் செய்து சாமானிய மக்களையும் மரியாதையுடைய வாழ்வை வாழச் செய்யலாம்’’ என்ற அடிப்படையில் முன்னெடுக்கப்பட்டது.

இந்நிலையில் வளரும் பொருளாதாரம், மக்களின் அடிப்படைத் தேவைகளைக் கூட பூர்த்தி செய்யவில்லை என்பதை ஆய்வு முடிவுகள் காட்டின. அது மட்டுமல்ல, நாடுகள் பொருளாதாரத்தில் செழித்தன. ஆனால், அரசாங்கங்கள் ஏழைகளாக ஆயின. செல்வங்கள் தனியார் கைகளுக்குச் சென்றன. அதே நேரத்தில் அளவற்ற பொருள் உற்பத்தியும் அளவற்ற கட்டுமானப் பணிகளும் புவியின் இயல்புத் தன்மையை மாற்றி மனித குலத்திற்கே ஆபத்தை ஏற்படுத்தியிருக்கின்றன.

இந்தச் சூழலை ஆய்வு செய்தபோது ஊழல் என்பது ஆறாகப் பெருக்கெடுத்து ஓடுவதைக் கண்டுபிடித்தனர்.

செல்வம் குவிக்கும் பணிகளுக்கு உதவிடும் அனைத்துத் தரப்புக்கும் முறையற்று நிதி கிடைத்தது. அதுதான் பெரும் ஊழலாகப் பார்க்கப்படுகிறது. அது அரசாங்கத்தில் மட்டும் நடப்பதாக நினைத்தால் அது தவறு. இந்தத் தொற்றுநோய் எங்கெல்லாம் பரவியிருக்கின்றது என்பதைக் கண்டுபிடிக்க கடந்த 20 ஆண்டுகளாக பல்வேறு ஆய்வு நிறுவனங்கள் ஆய்வுகளை மேற்கொண்டன.

இந்த ஊழல் அரசாங்கத்தில் தொடங்கி, அரசியலுக்குள் வந்து, அரசியல் கட்சிகளை விழுங்கி, அரசு நிர்வாகக் கட்டமைப்பை சீர்குலைத்து கடைசியாக பொதுமக்களையும் தன் பிடிக்குள் கொண்டுவந்து விட்டது. இவை அனைத்துக்கும் மையக் காரணம் சந்தைதான் என்பதைக் கண்டுபிடித்தனர். இன்று சந்தை, அரசுக்குள் மட்டும் தன் குணங்களைப் புகுத்தவில்லை. அனைத்து மானுட செயற்பாடுகளுக்குள்ளும் தன் குணங்களைப் புகுத்திவிட்டது.

உதாரணமாக கல்வி என்பது மானுடத்தை மேம்படுத்தும் கருவி. அது இன்று பணம் செய்ய உதவும் கருவியாக மாறி கல்விச் சந்தையை உருவாக்கிவிட்டது. நீர் என்பது உயிர் வாழ்வதற்கு அடிப்படை. அது இன்று சந்தையாக மாறி பெரும் மூலதனத்தில் பெரும் இலாபத்துடன் இயங்குகின்றது.

மருத்துவம் என்பது உயிர் காக்கும் துறை. ஆனால், அது இன்று மருத்துவச் சந்தை.

மக்களாட்சி அரசியலில் அதிகாரத்தைக் கைப்பற்ற இன்று வாக்குகளையே வாங்கும் பொருளாக மாற்றி வாக்குவங்கி சந்தையை உருவாக்கி விட்டனர். அத்துடன் வாக்குகளை விலை கொடுத்துப் பெற்ற மக்கள் பிரதிநிதிகள் தங்களையே சந்தைப்படுத்திக் கொண்டனர். அவர்களும் விற்கும், வாங்கும் பொருட்களாக மாற்றப்பட்டு விட்டனர். சந்தைக்கு வரும் இலாபம் எல்லை மீறியதாக வளரும்போது, அரசாங்கத்தையே விலை பேசும் சக்தி பெற்றதாக சந்தை உயர்ந்துவிடுகிறது.

அரசாங்கம், அரசியல், ஆளுகை, நிர்வாகம், உற்பத்தி, பொருள் விற்பனை அனைத்தும் எதற்காக என்றால் மக்கள் மேம்பாட்டுக்காக. ஆனால், கடந்த 30 ஆண்டுகளில் இவை அனைத்தும் இலாபம் குவிக்கும் செயலில் மட்டுமே ஈடுபட்டன. அதன் விளைவு, எந்த இடத்திலும் அறமோ, நேர்மையோ கிடையாது.

அறம் இழந்து செயற்படுகிறோம் என்ற கூச்சமும் அற்று மானுட சமூகம் செயற்பட ஆரம்பித்து விட்டது. இந்த நிலையை உற்று நோக்கிய பல ஆய்வு நிறுவனங்கள், அரசாங்கத்தின் மூலம், நேர்மையைக் கொண்டு வந்து விடலாம் என்று இனிமேலும் நம்புவது நம்மை நாமே ஏமாற்றிக் கொள்வதாகும் என முடிவெடுத்தன. மேலும், சமூகத்தை நல்வழிப்படுத்தவில்லை என்றால் நாம் எதிர்பார்க்கின்ற மாற்றம் நிகழாது என்பதை உணர்ந்து கொண்டன.

மோசமான சமூகத்தில் நல்ல அரசியலை முன்னெடுக்க முடியாது. தரம் தாழ்ந்த அரசியல் நிகழும் சூழலில் நல்ல அரசாங்கம் உருவாக முடியாது. நேர்மையற்ற முறையில் தேர்தலில் வெற்றி பெற்ற ஒரு கட்சியால் நல்ல ஆளுகையைக் கொடுக்க முடியாது. நல்ல ஆளுகை இல்லாத இடத்தில் நல்ல நிர்வாகம் இருக்க முடியாது.

எனவே, இதைத் தொடங்க வேண்டிய இடம் சமூகம்தான் என்று இந்த ஆய்வு நிறுவனங்கள் கூறுகின்றன.

இதற்கான சிந்தனைச் சூழலை உருவாக்க கையேடுகளை வெளியிடுகின்றன இந்த ஆய்வு நிறுவனங்கள். இந்தக் கையேடுகள், புதிய நேர்மைச் சிந்தனையை, நேர்மை நடத்தையை, நேர்மைச் செயற்பாடுகளை சமூகத்திலும் அரசியலிலும் ஆளுகையிலும் நிர்வாகத்திலும் வணிகத்திலும் எப்படிக் கொண்டுவருவது என்பதை விளக்குகின்றன.

இவற்றை ஆங்கிலத்தில் படித்துவிட்டு நம் சிந்தனையாளர்களும் அவை பற்றிய விவாதத்தை முன்னெடுக்கின்றனர்.

இந்நிகழ்வுகளைப் பார்க்கும்போது நமக்குப் புலப்படுவது ஒன்றுதான். அறம் சார்ந்த மானுட வாழ்க்கையைப் பெற எந்த மேலை நாட்டிடமும் ஆலோசனை பெற வேண்டிய அவசியம் நமக்குக் கிடையாது.

நம்மிடம் அனைத்தும் இருக்கின்றன. சுவாமி விவேகானந்தர், பகவான் அரவிந்தர், ரவீந்திரநாத் தாகூர், மகாத்மா காந்தி, வள்ளலார், வள்ளுவர் போன்றோர் கூறாத வாழ்வியல் கருத்துகள் எதுவும் அந்தக் கையேடுகளில் கிடையாது.

இவர்கள் கூறியவை யாருக்கும் புரியக்கூடிய வகையில் எளிமையானவைதான். இவர்கள் கூறிய வாழ்வியல் சிந்தனையைவிட மேம்பட்ட கருத்துகள் புதிதாக கொண்டுவரப்படுகின்ற விவாதங்களில், கட்டுரைகளில், கையேடுகளில் கூறப்படவில்லை. இவர்கள் அனைவரும் சமூகம் மாறாமல் அரசாங்கத்தால் மட்டும் மாற்றத்தைக் கொண்டுவர முடியாது என்று கூறியுள்ளனர்.

ஸ்ரீராமகிருஷ்ண மடத்தில் இருந்த ரெங்கனாநந்தா சுவாமி உலகம் முழுவதும் சுற்றி விவேகானந்தரை அடியொற்றி பிரசாரம் செய்தார். கல்விக் கழகங்களிலும், உயர்கல்வி நிலையங்களிலும், இந்திய ஆட்சிப் பணி அதிகாரிகளுக்கிடையேயும் அவர் ஆற்றிய உரைகள் புத்தகங்களாக வெளியிடப்பட்டுள்ளன. அதே போல்

ஆச்சார்ய விநோபா பாவே எழுதிய ‘ஸ்வராஜ்ய அறிவியல்’ புத்தகத்தை அனைவரும் படித்து புரிந்து கொண்டு வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டும் என்று மகாத்மா காந்தி ஒருமுறை கேட்டுக் கொண்டார் (அந்நூலில் காந்தியடிகளும் ஓர் அத்தியாயம் எழுதியுள்ளார்).

நம் மகான்கள் இந்திய சமூகத்திற்கு மட்டுமல்ல, உலக சமுதாயத்திற்கே தேவையான கருத்துகளைக் கூறினார்கள். ஆனால், அந்தக் கருத்துகளை நாம் பின்பற்றவில்லை. மாறாக அவர்களை பூஜித்து விட்டு நாம் செய்வதை தொடர்ந்து செய்துகொண்டிருக்கிறோம். சமூக ஒழுக்கம் எங்கிருந்து வரும்? அது தனிமனித ஒழுக்கத்திலிருந்துதான் வரும். அதற்கு முதலில் நாம் எளிய வாழ்வு வாழக் கற்றுக்கொள்ள வேண்டும். எளிமையாக வாழ்பவர்களைப் போற்றக் கற்றுக்கொள்ள வேண்டும்.

இன்று நாம் புலன்களின் ஆதிக்கத்தில் வாழ்வதால் கட்டுப்பாடற்ற வாழ்க்கையை வாழ்ந்துகொண்டிருக்கிறோம். புலனடக்கம் பெற்றவராக நாம் நம்மை மாற்றிக்கொண்டு தேவைக்கேற்ப வாழ்வை அறம் சார்ந்ததாக மாற்றிக்கொள்ள வேண்டும். அப்படி வாழும்போதுதான் நாமும் மாறுவோம். சமூகமும் மாறும். அதனால்தான் காந்தியடிகள் ‘‘எந்த மாற்றம் மற்றவர்களிடம் வரவேண்டும் என்று நீ எண்ணுகிறாயோ அந்த மாற்றம் உன்னிடமிருந்து தொடங்கட்டும்’’ என்றார்.

(நன்றி - தினமணி)




# 2023 தளபதிகள் கிண்ண படகோட்டல் போட்டியில் இந்திய கடற்படை அணி வெற்றி








திருகோணமலையிலுள்ள இலங்கைக் கடற்படை மற்றும் சமுத்திர அக்கடமியினால் 2023 ஜனவரி 09 முதல் 11 வரை நடத்தப்பட்ட 5 நாடுகளுக்கிடையிலான தளபதிகள் கிண்ண படகு சவாரிப் போட்டியில் எழிமலை இந்திய கடற்படை அக்கடமியின் அதிகாரி ஒருவரையும் மூன்று இளம் கடற்படை வீரர்களையும் கொண்ட படகோட்டல் அணியினர் தங்கப்பதக்கம் வென்றுள்ளனர்.

இப்போட்டியின் வெற்றியாளர்கள் இலங்கை கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் பிரியந்த பெரேராவால் கௌரவிக்கப்பட்டதுடன், 2023 தளபதிகள் கிண்ணமும் அவரால் வழங்கப்பட்டது. இதேவேளை 2023 ஜனவரி 12ஆம் திகதி இந்த அணியினரைச் சந்தித்திருந்த இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே இச்சாதனைக்காக அவ்வணியினரைப் பாராட்டியிருந்தார்.

நட்புறவுப்பாலத்தை கட்டியெழுப்புவதற்கான இந்திய கடற்படையின் முயற்சிகளுக்கு அமைவாகவே இந்திய கடற்படை அக்கடமியின் படகோட்டல் அணியினர் இந்த தளபதிகள் கிண்ண படகோட்டல் போட்டியில் கலந்துகொண்டனர். இதேவேளை திருகோணமலையிலுள்ள கடற்படை மற்றும் சமுத்திர அக்கடமியிலிருந்து அதிகாரி ஒருவரும் இரண்டு இளம் கடற்படை வீராகளும் அடங்கிய அணி, 2022 டிசம்பர் 04 முதல் 10 வரை இந்திய கடற்படை அக்கடமியால் நடத்தப்பட்ட அட்மிரல் கிண்ணத்துக்கான படகோட்டல் போட்டியில் பங்கேற்றிருந்தது.

அத்துடன் 2022 டிசம்பர் 15 முதல் 2023 ஜனவரி 15 வரை இலங்கை கடற்படையைச் சேர்ந்த அணியினருக்கு சமுத்திர படகோட்டல் பயிற்சிகள் இந்தியாவில் வழங்கப்பட்டன. மேலும், 2022 மார்ச் 10 முதல் 19 வரையிலான காலப்பகுதியில் சமுத்திரங்களில் பயணிக்கும் ஐந்து இந்திய கடற்படை படகுகள் இலங்கைக்கு விஜயம் செய்திருந்தன, இவ்விஜயத்தின்போது இலங்கைக் கடற்படை வீராகளுக்கு படகோட்டல் பயிற்சிகள் வழங்கப்பட்டன.

மேலும், இலங்கையின் வேண்டுகோளுக்கு இணங்க, மார்ச் 2022இல் இந்தியக் கடற்படையால் படகுகளுக்கான பொறிகள் வழங்கப்பட்டன. இந்தியாவின் ‘அயலுறவுக்கு முதலிடம்’ கொள்கையால் உந்தப்பட்டதன் விளைவாக, படகோட்டல் உள்ளிட்ட துறைகளில் இந்தியா மற்றும் இலங்கை கடற்படைகளுக்கு இடையேயான ஒன்றிணைந்த நடவடிக்கைகள் தோழமை, சகோதரத்துவம் மற்றும் கண்ணியம் ஆகியவற்றின் உள்ளுணர்வை மேலும் வலுவாக்குவதை இலக்காகக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.



கண்டி தேசிய வைத்தியசாலை புற்றுநோய் சிகிச்சைப் பிரிவில், கண்டி தமிழ் வர்த்தகர் சங்கத்தினால் பொங்கல் விழா நேற்றுக் கொண்டாடப்பட்டது கண்டி புற்று நோயாளர் தடுப்புச் சங்கத்தின் தலைவர் மொகான் சமரநாயக்க, கண்டி தமிழ் வர்த்தகர் சங்க அங்கத்தவர்களால் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார். வர்த்தகர் சங்க அங்கத்தவர்களையும் கலந்துகொண்டவர்களையும் படத்தில் காணலாம். (கண்டி நிருபர்)



கத்தாருக்கு விஜயம் மேற்கொண்டிருந்த கவிஞர் நஜ்முல் ஹுசைன், முன்னாள் தகவல் திணைக்கள அதிகாரி நூருல் அயின் நஜ்முல் ஹுசைன் ஆகியோர் தாம் எழுதிய நூல்களை கத்தார் தேசிய நூலகத்துக்குக் கையளித்தனர். இந்நூல்களை சிரேஷ்ட நூலகர் துஃபைல் ஏ.இக்பால் பெற்றுக்கொண்டார். இச்சந்தர்ப்பத்தில் நாவலாசிரியை ஜரீனா முஸ்தபா, கவிஞர் வெளிமடை ரபீக் ஆகியோரின் நூல்களும் கையளிக்கப்பட்டன. இதற்கான ஏற்பாடுகளை கத்தாருக்கான இலங்கைத் தூதரக சிரேஷ்ட அதிகாரி ரஷீத் எம்.பியாஸ் செய்திருந்தார்.

# சப்ரகமுவ பல்கலைக்கழகத்தில் ஹிந்தி மொழி கற்கை ஆரம்பம்



இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே 2023 ஜனவரி 11ஆம் திகதி பெலிஹுலோயாவில் உள்ள சப்ரகமுவ பல்கலைக்கழகத்துக்கு முதன்முதலாக விஜயம் மேற்கொண்டிருந்தார்.

இவ்விஜயத்தின்போது இப்பல்கலைக்கழகத்தில், கலாசார உறவுகளுக்கான இந்திய பேரவையின் ஹிந்திமொழி இருக்கையை ஸ்தாபிப்பதற்கான புரிந்துணர்வு உடன்படிக்கை அப்பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் ரத்நாயக்க மற்றும் உயர்ஸ்தானிகரால் கைச்சாத்திடப்பட்டது. இந்த புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம் இந்திய பேராசிரியர்களும் இப்பல்கலைக்கழகத்தில் ஹிந்தி மொழி கற்கைநெறியை கற்பிக்க வழியமைக்கப்பட்டுள்ளது.

அத்துடன் அங்கு புதிதாக ஸ்தாபிக்கப்பட்ட கலாசார உறவுகளுக்கான இந்தியப் பேரவையின் ஹிந்திமொழி இருக்கையில் சிறந்த பெறுபேறுகளைப் பெறும் மாணவருக்கு உயர்ஸ்தானிகரின் தங்கப்பதக்கம் வழங்கப்படுமெனவும் உயர்ஸ்தானிகர் இங்கு அறிவித்திருந்தார். மேலும், கண்டியிலுள்ள உதவி இந்திய உயர்ஸ்தானிகராலயத்துடன் இணைந்து இப்பல்கலைக்கழகத்தால் நடத்தப்பட்ட ஹிந்தி கவிதைப் போட்டியில் வெற்றிபெற்றவர்களும் உயர்ஸ்தானிகரால் கௌரவிக்கப்பட்டனர்.

மேலும், சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் சமூக விஞ்ஞான மற்றும் மொழிகள் பீடத்தினால் ஒழுங்கமைக்கப்பட்ட சமூக விஞ்ஞான மற்றும் மொழிகளுக்கான சர்வதேச மாநாட்டிலும் உயர்ஸ்தானிகர் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார். புலமையாளர்கள், ஆராய்ச்சியாளர்கள், மாணவர்கள் மற்றும் உத்தியோகத்தர்களுக்காக நடத்தப்படும் இம்மாநாட்டில் சமூகவிஞ்ஞானமற்றும் மொழிகள் குறித்த தமது ஆய்வுகளை அவர்கள் சமர்ப்பிக்க முடியும். அத்துடன் இந்த மாநாட்டுக்கான இணையசேவையும் உயர்ஸ்தானிகர் மற்றும் துணைவேந்தரால் இந்நிகழ்வின்போது ஆரம்பித்துவைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக உரை நிகழ்த்தியிருந்த உயர்ஸ்தானிகர், ஸ்திரத்தன்மை மற்றும் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளில் இந்தியாவின் சாதனைகளை பட்டியலிட்டிருந்தார். அத்துடன் பிரதமர் நரேந்திர மோடியின் கருத்துகளை மேற்கோளிட்டு உரையைத் தொடர்ந்த அவர் மீள்பாவனை, மீள்சுழற்சி, மீள்வடிவமைப்பு, மீள்பயன்பாடு, மீளுற்பத்தி போன்றவை இந்தியாவின் கலாசார நெறிமுறையின் அங்கங்களாக ஸ்திரத்தன்மையை நோக்கிய பயணத்தில் எவ்வாறான முக்கியத்துவத்தைக் கொண்டிருக்கின்றது என்பது தொடர்பாகவும் சுட்டிக்காட்டியிருந்தார்.

இலங்கையில் அபரிமிதமான புதுப்பிக்கத்தக்க எரிசக்தி வளங்கள் உள்ளன என்பதை சுட்டிக்காட்டிய அவர், ஸ்திரமான எரிசக்தி மூலங்களிலிருந்து அதிக சக்தியை உற்பத்தி செய்வதற்காக இந்தியா இலங்கையில் தொடர்ந்து முதலீடுகளை மேற்கொள்ளும் என்றும் குறிப்பிட்டார். அதுமட்டுமல்லாமல், இப்பல்கலைக்கழகத்திற்கு உயர்ஸ்தானிகராலயத்தின் தொடர்ச்சியான ஆதரவையும் அவர் உறுதியளித்தார்.

இந்தியா - இலங்கை இடையிலான ஒத்துழைப்பில் கல்வி மிகவும் முக்கிய இடத்தைப் பெறுகின்றது. அண்மையில் சென்னை இந்திய தொழில்நுட்பக் கழகம் தனது முதுமாணிக்கற்கைநெறிகளை இலங்கை தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தில் ஆரம்பித்துள்ளது. அதுமட்டுமல்லாமல், ஒவ்வொரு வருடமும் பட்டப்படிப்பு முதல் முனைவர் கற்கைநெறிகள் வரையிலான பல்வேறு கற்கைகளுக்காக பல நூற்றுக்கணக்கான புலமைப்பரிசில்கள் வழங்கப்படுகின்றன. மேலும், இலங்கையில் தமது கல்வியைத் தொடர்வதற்காக பொருளாதார ரீதியில் நலிவடைந்த மாணவர்களுக்கும் நிதி ஆதரவு வழங்கும் திட்டங்களும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



கல்வி, விளையாட்டு, அறிவிப்பு, பேச்சு உட்பட இன்னும் பல்வேறு துறைகளில் தடம்பதித்த 27 பேருக்கு விருதுகள் வழங்கும் நிகழ்வு கிரியேட்டிவ் பூல் டீம் (Creative Pool Team) எனும் அமைப்பினால் கொழும்பு எல்பின்ஸ்டன் நிலையத்தில் நடத்தப்பட்டபோது வானொலி அறிவிப்புத்துறையில் பல வருடகால அனுபவமும் திறமையையும் கொண்ட ஏ.ஆர்.எம்.முஹம்மது முனாஸுக்கு இவ்வமைப்பின் பணிப்பாளர் எம்.அஸ்பாக் விருது வழங்கி கௌரவிப்பதையும் நிகழ்வில் கலந்துகொண்டவர்களையும் படங்களில் காணலாம்

# வரியை சரியாக அறவிடுவதற்கான முறைமை உருவாக்கப்பட வேண்டும்

## அரசாங்க நிதி பற்றிய குழுவின் தலைவர் வலியுறுத்து

நாட்டின் ஜனாதிபதி முதல் அனைத்து அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அதிகாரிகளின் நிதி சாரா அனுகூலங்கள் தொடர்பில் அறவிடப்படவேண்டிய வரியை சரியாக அறவிடுவதற்கான முறைமையொன்று செயற்படுத்தப்பட வேண்டும் என அரசாங்க நிதி பற்றிய குழுவின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஹர்ஷ டி சில்வா அண்மையில் வலியுறுத்தினார்.

ஏதாவதொரு பதவி வகிக்கும் நபருக்கு நிதி சாரா அனுகூலங்களாக வாகனம், வீடு, பணியாளர்கள் போன்ற அனுகூலங்கள் கிடைப்பெறுவதால், அவை அனைத்தையும் கருத்தில் கொண்டு சரியாக இந்த வரி அறவீடு இடம்பெற வேண்டும் என அவர் சுட்டிக்காட்டினார்.

2023ஆம் ஆண்டுக்கான வரி அறிவிடுவது பற்றிய வேலைத்திட்டம் தொடர்பில் கலந்துரையாடுவதற்கு உள்நாட்டு இறைவரித் திணைக்களம் கடந்த 10ஆம் திகதி அரசாங்க நிதி பற்றிய குழு முன்னிலையில் அழைக்கப்பட்டிருந்த போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

2022ஆம் ஆண்டில் அறவிடப்பட்ட வரி சுமார் 860 பில்லியன் ரூபா எனவும் 2023ஆம் ஆண்டில் சுமார் 1667 பில்லியன் ரூபா அறவிடுவதற்கு எதிர்பார்ப்பதாகவும் உள்நாட்டு இறைவரித் திணைக்கள ஆணையாளர் நாயகம் இதன்போது சுட்டிக்காட்டினார். அதற்கமைய, கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் சுமார் 922 பில்லியன் ரூபா வரியை இவ்வாண்டு பெற்றுக்கொள்ள எதிர்பார்ப்பதாக அவர் குறிப்பிட்டார்.

2023ஆம் ஆண்டின் எதிர்பார்க்கப்பட்ட வரி வருமானத்தில் கூட்டிணைந்த வருமான வரி மூலமே அதிக நிதி கிடைக்கப்பெறவுள்ளது. அது 603 பில்லியன் ரூபாவாகும். அதேபோன்று, பெறுமதி சேர் வரி (VAT) மூலம் 553 பில்லியன் ரூபா வருமானம் பெற எதிர்பார்ப்பதாக உள்நாட்டு இறைவரித்திணைக்கள அதிகாரிகள் சுட்டிக்காட்டினர்.

இந்த நிதி அறவிடும் வேலைத்திட்டத்தை வலுப்படுத்துவது தொடர்பில் குழுவில் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது. வரி செலுத்தாமை தொடர்பில் நீதிமன்றத்தில் உள்ள வழக்குகள் உள்ளிட்ட சிக்கல்கள் தொடர்பில் உள்நாட்டு இறைவரித் திணைக்களம் தெளிவுபடுத்தியது. இந்த சிக்கல்களை மதிப்பீடு செய்து தீர்வுகளை பெற்றுக்கொள்ள அரசாங்க நிதி பற்றிய குழு எதிர்காலத்தில் தலையிடுவதாக குழுவின் தலைவர் குறிப்பிட்டார்.

அதற்கமைய, இந்த வரி அறிவிடுவது தொடர்பான முன்னேற்றம் பற்றி பெப்ரவரி மாதத்தில் குழுவுக்கு அறிக்கையிடுமாறும் குழுவின் தலைவர் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்துக்கு அறிவுறுத்தினார்.

அங்கவீன இராணுவ வீரர்களின் ஓய்வூதியத்துக்கும் வரி அறிவிடுவதாக வெளியான ஒரு சில ஊடக அறிக்கைகள் தொடர்பிலும் குழுவின் கவனம் செலுத்தப்பட்டது. எந்த வகையிலும் ஓய்வூதியத்துக்கு அவ்வாறான வரி அறவீடு மேற்கொள்ளப்படுவதில்லை என உள்நாட்டு இறைவரித் திணைக்கள அதிகாரிகள் சுட்டிக்காட்டினர்.


இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் 2307/12ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகளை அனுமதிப்பதற்காக குழுவில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. விளையாட்டு உபகரணங்கள், புகையிரத உதிரிப்பாகங்கள், அலங்காரத்துறை சார்ந்த ஒரு சில பொருட்கள் உள்ளிட்டவற்றுக்கு விதிக்கப்பட்டிருந்த இறக்குமதிக் கட்டுப்பாட்டை தளர்த்துவதற்காக இந்த வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

வர்த்தமானி அறிவித்தலுக்கு அனுமதி வழங்கிய குழு, சுற்றுலா, அலங்காரத்துறை போன்ற துறைகளுக்கு தேவையான தயாரிப்புகளை உரிய நிறுவனங்களின் பரிந்துரையின் அடிப்படையில் கொண்டுவருவதற்கு அனுமதி வழங்குவதை விட, அதிக வரி விதித்தாவது இறக்குமதிக்கு இடமளிப்பது பொருத்தமானது என தெரிவித்தது. அவ்வாறில்லை எனில் கறுப்பு சந்தை உருவாகுவதைத் தடுக்க முடியாமல் போகும் என குழுவில் கலந்துரையாடப்பட்டது.

மேலும், 2308/51ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட வெளிநாட்டு செலவாணிச் சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகளுக்கும் குழுவின் அனுமதி வழங்கப்பட்டது.

இராஜாங்க அமைச்சர்களான சுரேன் ராகவன், நாடாளுமன்ற உறுப்பினர்களான அனுர பிரியதர்ஷன யாப்பா, சந்திம வீரக்கொடி, சஹன் பிரதீப் விதான மற்றும் மதுர விதானகே ஆகியோர் இக்கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

# பெரோஸ் ஹாஜியார் காலமானார்



(பேருவளை பீ.எம்.முக்தார்)

பேருவளை பகுதியைச் சேர்ந்த முன்னணி சமூக சேவையாளர்களில் ஒருவரான ஏ.எச்.எம்.பெரோஸ் ஹாஜியார் கடந்த 13ஆம் திகதி இரவு காலமானார்.இவருக்கு வயது 65 ஆகும்.

மர்ஹும் இஸ்மாயில் லெப்பை - மரிக்கார் அப்துல் ஹமீத் தம்பதிகளின் புதல்வரான இவர் மேல் மாகாண முன்னாள் முதலமைச்சர் அமரர் ரெஜினோல்ட் குரேயின் இணைப்புச் செயலாளராகவும் கடமையாற்றினார்.

இவர் பிரதேசத்தின் முன்னேற்றத்திற்காக இன, மத, மொழி, கட்சி பேதமின்றி தியாக உணர்வோடு சேவையாற்றி சகல இன மக்களினதும் நன்மதிப்பைப் பெற்றுக் கொண்டவராவார்.

சீனன்கோட்டை இரத்தினக்கல் மற்றும் ஆபரண வர்த்தகர் சங்க முன்னாள் இணைச் செயலாளரான பைஸல் ஹமீதின் சகோதரரான இவரது ஜனாஸா கடந்த 14ஆம் திகதி மாலை சீனன்கோட்டை பாஸிய்யா பெரிய பள்ளிவாசல் மையவாடியில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

# புத்தளத்தில் இரு நூல்கள் வெளியீடு



(ரஸீன் ரஸ்மின்)

மன்னார், சிலாவத்துறையைச் சேர்ந்த வரலாற்று ஆய்வாளரும் எழுத்தாளருமான எஸ்.எம்.அன்ஸார் எழுதிய 'சிலாவத்துறை வரலாறும் கலாசார பண்பாட்டுக் கோலங்களும்' மற்றும் 'சிலாவத்துறை பாடசாலை வரலாறு' எனும் இரு நூல்களின் அறிமுக விழா நேற்று முன்தினம் (14) சனிக்கிழமை புத்தளம் பாத்திமா மகளிர் கல்லூரி கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

ஆசிரியர் ஓ.எம்.இர்ஷாத் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் நூல் விமர்சகரும் ஓய்வுநிலை அதிபருமான என்.நாகராஜா, ஓய்வுபெற்ற பிரதேச செயலாளர் முஹம்மது முஹ்சீன், சிலாவத்துறை அரசினர் முஸ்லிம் வித்தியாலயத்தின் முன்னாள் அதிபர் எம்.எம்.எம்.தையூப் உட்பட கவிஞர்கள், இலக்கியவாதிகள், ஆசிரியர்கள், உலமாக்கள், வைத்தியர்கள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

இந்நூல் அறிமுக விழாவில் நூல் விமர்சகரும் ஓய்வுநிலை அதிபருமான என்.நாகராஜா நூல் விமர்சன உரையை நிகழ்த்தினார்.

அத்துடன், வேப்பமடு முஸ்லிம் மகா வித்தியாலய ஆசிரியர் பி.எம்.ஜாஹித் நுலாசிரியரிடமிருந்து நூலின் முதல் பிரதியைப் பெற்றுக்கொண்டதுடன், நிகழ்வுக்கு வருகை தந்த ஏனைய அதிதிகளுக்கும் நூலாசிரியரால் குறித்த இரண்டு நூல்களும் வழங்கிவைக்கப்பட்டன.

மன்னார், சிலாவத்துறையின் பண்டைய வரலாற்று முக்கியத்துவத்தையும் முஸ்லிம் குடியேற்றத்தையும் அந்தப் பிரதேசங்களினதும் முஸ்லிம் பண்பாட்டையும் இணைத்து நோக்குவதற்கான ஒரு வாய்ப்பாக இந்த 'சிலாவத்துறை வரலாறும் கலாசார பண்பாட்டுக் கோலங்களும்' எனும் நூல் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
வெள்ளிக்கிழமை 2022.01.13
உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk
NLB

மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 4999 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 11,053,221.00
ஆங்கில எழுத்து D — வெற்றி இலக்கங்கள் 2 6 8 2 4 3

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3241 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 70,878,572.00
ஆங்கில எழுத்து D — வெற்றி இலக்கங்கள் 05 36 40 75

ஜாதிக சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 1454 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 13,326,042.40
வெற்றி இலக்கினம் மிதுனம் — வெற்றி இலக்கங்கள் 2 8 1 1 0 5

தன நிதானய — சீட்டிழுப்பு இலக்கம் 1029 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 141,845,291.20
ஆங்கில எழுத்து I — வெற்றி இலக்கங்கள் 39 43 61 79

ராசி சுப பலன் Handahana — சீட்டிழுப்பு இலக்கம் 308 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,688,253.00
வெற்றி இலக்கினம் சிம்மம் — வெற்றி இலக்கங்கள் 17 27 39 50 — விசேட இலக்கினம் சிம்மம்

மெகா பவர் — சீட்டிழுப்பு இலக்கம் 1347 — அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 292,819,270.00
ஆங்கில எழுத்து W — சுப்பர் இலக்கம் 07 — வெற்றி இலக்கங்கள் 06 20 37 80
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
சனிக்கிழமை 2023.01.14
உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk
NLB

மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 5000 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 12,244,790.00
ஆங்கில எழுத்து F — வெற்றி இலக்கங்கள் 4 2 1 0 7 6

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3242 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 71,044,145.60
ஆங்கில எழுத்து A — வெற்றி இலக்கங்கள் 06 12 28 29

ஜாதிக சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 1455 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 13,326,042.40
வெற்றி இலக்கினம் கடகம் — வெற்றி இலக்கங்கள் 6 1 6 1 2 9

தன நிதானய — சீட்டிழுப்பு இலக்கம் 1030 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 142,034,491.60
ஆங்கில எழுத்து P — வெற்றி இலக்கங்கள் 09 21 49 58

ராசி சுப பலன் Handahana — சீட்டிழுப்பு இலக்கம் 309 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,688,253.00
வெற்றி இலக்கினம் கடகம் — வெற்றி இலக்கங்கள் 04 23 37 58 — விசேட இலக்கினம் கடகம்

மெகா பவர் — சீட்டிழுப்பு இலக்கம் 1348 — அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 293,117,518.00
ஆங்கில எழுத்து W — சுப்பர் இலக்கம் 19 — வெற்றி இலக்கங்கள் 07 08 76 79
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

# மலையகத்தில் தைப்பொங்கல் கொண்டாட்டம்





(எஸ்.கணேசன், செ.தி.பெருமாள்)

மத்திய மலைநாட்டின் சகல பகுதிகளிலும் தைப்பொங்கல் பண்டிகை நேற்று (15) வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. ஆண்டுதோறும் இப்பண்டிகை தமிழ் மக்களால் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருவது வழமையாகும்.

சூரிய பகவானுக்கு நன்றி தெரிவிக்கும் விதமாக இப்பண்டிகை கொண்டாடப்பட்டு வருகின்றது. உழைக்கும் மக்கள் இயற்கைக்கும் மற்ற உயிர்களுக்கும் நன்றி சொல்லும் ஒரு நாளாக இதனைக் கொண்டாடுகின்றனர். நல்ல விளைச்சல் கொடுத்தமைக்காக பூமி, சூரியன் மற்றும் மாடு போன்றவற்றிற்கு நன்றி தெரிவிக்கும் விதமாக பொங்கல் படைத்து இந்நாளில் வழிபடுவார்கள்.

அந்த வகையில், மலையக மக்கள் சமய வழிபாட்டுக்கு முக்கியத்துவம் கொடுத்து தைப்பொங்கல் பண்டிகையை நேற்று மிகவும் சிறப்பாகக் கொண்டாடினார்கள்.

அதிகாலை வேளையில் எழுந்து நீராடி வீடுகளில் சூரியக் கோலமிட்டு, மாவிலைத் தோரணங்கள் கட்டி, வீட்டை அலங்கரித்து, தைப்பொங்கல் பண்டிகையை நேற்றைய தினம் மக்கள் கொண்டாடினர். இதேவேளை மார்கழி மாதத்தில் கடந்த 30 நாட்களாக மலையகத்திலுள்ள சகல இந்து ஆலயங்களிலும் இராமர் பஜனை இடம்பெற்று வரும் நிலையில் தைப்பொங்கல் தினத்தில் இராம பிரானுக்கு தேர்த்திருவிழாவும் இடம்பெற்று வருகிறது.

தைப்பொங்கல் பண்டிகையை முன்னிட்டு ஹட்டன் பகுதியில் ஸ்ரீ மாணிக்கப்பிள்ளையார் ஆலயத்தின் பிரதான குருக்கள் தலைமையில் விசேட சமய வழிபாடுகள் நடைபெற்றன. விசேட பூஜை வழிபாடுகளில் ஆலய பரிபாலன சபையினர் உட்பட பொதுமக்களும் ஈடுபட்டிருந்தனர்.

நாட்டில் நிலவி வரும் தற்போதைய கடும் பொருளாதார நெருக்கடி மற்றும் விலைவாசி உயர்வுக்கு மத்தியிலும் சமய சம்பிரதாயங்கள் மற்றும் தமிழர் கலாசாரத்துக்கு முக்கியத் துவமளித்து தைப்பொங்கல் பண்டிகை மலையகத் தமிழர்களால் மிகச்சிறப்பாகக் கொண்டாடப் பட்டதை நேற்று காணக்கூடியதாக இருந்தது.

# சமூக நல்லிணக்க அமைச்சர் காலத்தின் தேவை

## கண்டி மாவட்ட சர்வமத அமைப்பு தெரிவிப்பு





(கண்டி நிருபர்)

நமது நாட்டில் இன்றைய அரசியல், சமூக தேவைகளில் சகவாழ்வு மற்றும் சமூக நல்லிணக்கத்திற்கு ஓர் அமைச்சர் நியமிக்கப்பட வேண்டியது முக்கிய தேவையாக உள்ளதாக கண்டி மாவட்ட சர்வமத அமைப்பு தெரிவித்துள்ளது. கண்டியில் நேற்று முன்தினம் (14) நடத்திய ஊடக சந்திப்பின்போதே மேற்படி அமைப்பின் அமைப்பாளர் காமினி ஜயவீர கருத்து தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

முன்னர் இன நல்லிணக்கம், சகவாழ்வு என்பவற்றுக்கு அமைச்சர்களாகப் பலர் இருந்துள்ளனர். முன்னாள் அமைச்சர்களான மனோ கணேசன், வாசுதேவ நாணயக்கார போன்ற பலர் அப்பதவிகளில் இருக்கும்போது சிறுபான்மைச் சமூகங்களுக்கு இழைக்கப்படும் அநீதிகள் குறித்து அவ்வப்போது குரல் எழுப்பியதுடன், இன நல்லிணக்கம் குறித்து பல வேலைத்திட்டங்களையும் நடைமுறைப் படுத்தினர்.

தமிழ்மொழிப் பிரயோகம் போன்ற விடயங்கள் குறிப்பிட்ட அடைவு மட்டத்தில் காணப்பட்டது. தற்போது இன நல்லிணக்கம் தேவைப்படும் காலகட்டத்தில் அமைச்சர் ஒருவர் இல்லாத காரணத்தால் சில விடயங்களில் குறிப்பிட்ட தடைகள் ஏற்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

இதன்போது செயலாளர் ரேணுகா மல்லிய கொட தெரிவிக்கையில், காலத்திற்கு காலம் உரிய நேரத்தில் தேர்தல்களை நடத்துவது தேர்தல் ஆணைக்குழுவின் கடமை. மேலும் அது ஜனநாயக உரிமை. நாட்டில் பணம் உள்ளதா இல்லையா என்பது பிரச்சினை அல்ல. தேர்தல் ஆணைக்குழுவுக்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

தேர்தலை நடத்துவது அவர்கள் பொறுப்பு. நாட்டில் பொருளாதாரப் பிரச்சினை இருக்கு மாயின் அது வேறு விடயம். மக்கள் கோரிக்கை விடுத்தாலும் விடுக்காவிட்டாலும் அரசியலமைப் பின்படி தேர்தல் நடத்தும் காலம் வந்தால் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்றார்.




**விண்வெளிக்கு முதன்முதலாக சென்று வரலாறு படைத்த விண்வெளி வீரர் யூரி ககாரின் 1961இல் இலங்கைக்கு விஜயம் செய்தபோது இரத்தினபுரி ஹிதெல்லன சீவலி மகா வித்தியாலயத்தில் அவரால் நடப்பட்ட மரத்துக்கு அருகில் அவரது உருவச்சிலையொன்று திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் இலங்கைக்கான ரஷ்யத் தூதுவர் லெவான் சிமியோன் ஜகர்யான் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு இந்த உருவச் சிலையை திறந்து வைத்தார். (ஏ.ஏ.எம்.பாயிஸ்)**

# பிரம்படியால் 3 மாணவிகள் வைத்தியசாலையில் அனுமதி

(ஏ.ஏ.எம்.பாயிஸ்)



வெளிநாட்டு உதவியில் இயங்கும் தனியார் பாடசாலை ஒன்றில் கல்வி கற்கும் மாணவிகள் மூவர் பிரம்படி காரணமாக காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்களை பிரம்பால் அடித்ததாக குற்றஞ்சாட்டி மாணவர்களின் பெற்றோர்களால் செய்யப்பட்ட முறைப்பாட்டையடுத்து இப்பாடசாலை அதிபரும் முகாமையாளரான வெளிநாட்டைச் சேர்ந்த பெண் மணியும் விசாரணைக்கு அழைக்கப் பட்டுள்ளனர்.

ஊரகஸ்மங்ஹந்திய பகுதியில் இயங்கும் தனியார் பாடசாலையிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. பாடசாலையின் நீர்க்குழாயை சேதப்படுத்திய குற்றத்துக்காக 10, 11 மற்றும் 14 வயதுகளையுடைய இம்மாணவிகள் மூவரும் பிரம்புகளால் தண்டிக்கப்பட்டுள்ளதால் இம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள சிறுமிகளின் வைத்திய அறிக்கைகளின் பிரகாரம் மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமென பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.



*ஹாலி-எல நகர் அருள்மிகு ஸ்ரீ வீரசக்தி விநாயகர் ஆலயத்தில் நேற்று தைப்பொங்கல் சிறப்பு பூஜை வழிபாடுகள் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்களைக் காணலாம். (நடராஜா மலர்வேந்தன்)*

# யாழில் பலத்த பாதுகாப்புடன் இடம்பெற்றது பொங்கல் விழா


(யாழ். நிருபர்)


யாழ்ப்பாணத்திற்கு நேற்று (15) ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விஜயம் மேற்கொண்டதையடுத்து யாழ்ப்பாணம் முழுவதும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

நல்லூர் சிவன் ஆலயத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற தேசிய பொங்கல் விழாவில் கலந்துகொள்வதற்காக ஜனாதிபதி யாழ்ப்பாணத் திற்கு விஜயம் மேற்கொண்டார்.

இதன்போது யாழ்ப்பாணத்தில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்த நிலையில், நல்லூர் ஆலயத்திற்கு முன்னால் பொங்கல் இடம்பெற்றவேளை ஆயுதம் தாங்கிய இராணுவத்தினர் கடமையில் ஈடுபட்டிருந்தனர்.

# உலகமே தமிழர்களின் பின்னால் நிற்கிறது: முதுகெலும்புள்ள தலைவர் எமக்கு இல்லை!

## காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் தெரிவிப்பு

(வவுனியா நிருபர்)

உலகமே தமிழர்களின் பின்னால் நிற்கிறது, ஆனால் முதுகெலும்புள்ள தலைவர் எமக்கு இல்லை என காணாமலாக்கப்பட்டோரின் உறவு கள் தெரிவித்துள்ளனர்.

காணாமலாக்கப்பட்ட தமிழ்க் குழந்தைகளை கண்டறியவும் எதிர்கால இனப்படு கொலையிலிருந்து தமிழர்களை காக்கக் கோரியும் வவுனியா பிரதான தபாலகத்திற்கு அருகாமையில் தொடர்ச்சியான போராட்டத்தின் 2156 நாளாக போராடிவரும் காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளே இவ்வாறு தெரிவித்தனர்.

பண்டைய தமிழ் இறையாண்மை பொங்கல் வேண்டும் என தெரிவித்து இடம்பெற்ற கவனயீர்ப்பு போராட்டத்திலேயே இவ்வாறு தெரிவித்தனர். தொடர்ந்தும் அங்கு கருத்து தெரிவித்த கோ.ராஜ்குமார்,

இரண்டு முக்கிய இராணுவ மேஜர்கள் மீது அமெரிக்கா சமீபத்தில் பயணத் தடையுடன் வேறு பல நிபந்தனைகளை விதித்தது. சுமார் 2 வாரங்களுக்கு முன்னர், இலங்கையின் முன்னாள் இரண்டு ஜனாதிபதிகளுக்கு கனடா தடை விதித்தது.

இந்த இரண்டு ஜனாதிபதிகளுடன் தொடர்புள்ள எந்தவொரு கனேடியர்களும் தண்டிக்கப்படுவார்கள் என்பது மிகவும் கவனிக் கத்தக்கது. இவையெல்லாம் நம் மக்களுக்கு என்ன சொல்கின்றன?

உலகமே தமிழர்களின் பின்னால் நிற்கிறது, ஆனால் முதுகெலும்புள்ள தலைவர் எமக்கு இல்லை. எமது தாய்மார்களுடன் இணைந்து தமிழ் இறையாண்மைக்காக யாரேனும் ஒருங்கிணைத்து குரல் கொடுக்க வேண்டும் என விரும்புகிறோம்.

இறையாண்மை என்பது ஒரு கெட்ட வார்த்தை அல்ல, அது ஒரு நட்பான எளிமையான சுதந்திர வார்த்தை.

குறிப்பாக, அமெரிக்காவுடன் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்தை வலியுறுத்துமாறு எமது தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களை வலியுறுத்து கிறோம். கொழும்பைக் கண்டு பயந்தால் அமெரிக்காவிடம் பேசுங்கள்.

சீன ஆதிக்கத்தை ஒடுக்க அமெரிக்கத் தலைமை யுடன் இந்தியப் பெருங்கடலைப் பாதுகாக்கும் நாடுகள் “குக்” தீவுகளுக்கு இறையாண்மையை வழங்கின. இங்கும் இறையாண்மைக்கான வலுவான சாத்தியம் உள்ளது - என தெரிவித்தார்.

# வர்த்தக நிலையங்களிலிருந்து நீதிமன்றத்தினூடாக 4 இலட்சத்து 65 ஆயிரம் ரூபா தண்டப்பணம் அறவீடு

## வவுனியா மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் தெரிவிப்பு



வவுனியா மாவட்டத்தில் வர்த்தக நிலையங்களிலிருந்து நீதிமன்றத்தினூடாக 4 இலட்சத்து 65 ஆயிரம் ரூபா தண்டப்பணமாக அறவிடப்பட்டுள்ளதாக மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் தி.திரேஸ்குமார் தெரிவித்துள்ளார்.


தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் மூலம் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு பதில் அளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது,

வவுனியா மாவட்டத்தில் 01.09.2022 தொடக்கம் 15.10.2022 வரையான காலப் பகுதியில் 66 வர்த்தக நிலையங்கள், பாவனை யாளர் அலுவல்கள் அதிகாரசபையால் சோதனை செய்யப்பட்டன. அதில் முறையாக சுட்டுத் துண்டில் தகவல் வழங்காமை தொடர்பாக 10 வர்த்தக நிலையங்களுக்கு எதிராகவும், காலாவதியான பொருட்களை விற்பனைக்கு வைத்திருந்தமை தொடர்பாக 20 வர்த்தக நிலையங்களுக்கு எதிராகவும், நுகர்வோரை ஏமாற்றும் இயல்புடைய நடத்தையில் ஈடுபட விலையை மாற்றியமை தொடர்பில் 29 வர்த்தக நிலையங்களுக்கு எதிராகவும், விலை காட்சிப்படுத்தாமை தொடர்பில் 7 வர்த்தக நிலையங்களுக்கு எதிராகவும் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டது.

குறித்த காலப்பகுதியில் மேற்குறித்த வழக்குகள் உட்பட 87 வழக்குகள் தாக்கல் செய்யப் பட்டதுடன், நீதிமன்றத்தினால் 4 இலட்சத்து 65 ஆயிரம் ரூபா தண்டமாகவும் அறவிடப்பட்டது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# பன்முகப்படுத்தப்பட்ட நிதியில் 18 பொது அமைப்புகளுக்கு உதவித்திட்டம்

(சாவகச்சேரி நிருபர்)



யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனின் நாடாளுமன்ற பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டிலிருந்து நேற்று (15) தென்மராட்சியிலுள்ள 18 பொது அமைப்புகளுக்கு உதவித்திட்டங்கள் வழங்கப்பட்டுள்ளன.

தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட வள்ளுவன் சனசமூக நிலையம், வான்மதி சனசமூக நிலையம், எழுது மட்டுவாழ் வடக்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம், கலைவாணி சனசமூக நிலையம், ஸ்ரீ விநாயகர் சனசமூக நிலையம், பாலமுருகன் சனசமூக நிலையம், உதயசூரியன் சனசமூக நிலையம், மட்டுவில் நுணாவில் கிராம அபிவிருத்திச் சங்கம், கெற்பேலி கிராம அபிவிருத்திச் சங்கம், பாரதி சனசமூக நிலையம், கைதடி தெற்கு சனசமூக நிலையம், மண்டுவில் கிராம அபிவிருத்திச் சங்கம், ஸ்ரீ முருகன் சனசமூக நிலையம், ஸ்ரீ கணேசா சனசமூக நிலையம், வெள்ளாம்போக்கட்டி கிராம அபிவிருத்திச் சங்கம், நாவற்காடு பொது மண்டபம், விநாயகர் சனசமூக நிலையம் மற்றும் லிகோரியார் சனசமூக நிலையம் ஆகியவற்றுக்கு குறித்த உதவித்திட்டம் வழங்கப்பட்டது.

சாவகச்சேரியில் இடம்பெற்ற குறித்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் கலந்துகொண்டு பொது அமைப்புகளுக்கான உதவித்திட்டங்களை கையளித்திருந்தார்.

இதன்போது அலுமாரி, கதிரை, வாங்கு, மேசை, ஒளி விளக்கு, ஒலி பெருக்கி கருவி உள்ளிட்ட பொருட்கள் வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ‘தமிழன்’ அலுவலக தைத்திருநாள் நிகழ்வுகள்...

படப்பிடிப்பு : சமன் அபேசிறிவர்தன





நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலயத்தில் தைப்பொங்கல் திருநாள் நிகழ்வுகள் இடம்பெற்றன. இதன்போது பொங்கல் பொங்குவதையும் சுவாமி வலம் வருவதையும் பூஜை வழிபாடுகள் இடம்பெறுவதையும் படங்களில் காணலாம்.



கண்டி ஸ்ரீ செல்வவிநாயகர் கோயிலின் தைப்பொங்கல் பண்டிகையின் விசேட பூஜை வழிபாடுகள் கோயிலின் அறங்காவலர் கோவிந்தசாமி கிருஷ்ணமூர்த்தி தலைமையில் இடம்பெற்றன. இந்நிகழ்வில் பொங்கல் விசேட சமய வழிபாடுகளுடன் கோயிலின் உள்வீதி ஊர்வலம், வசந்த மண்டபப் பூஜை, வெளிவீதி ஊர்வலம் என்பன நடைபெற்றன. (படங்கள்: இக்பால் அலி)

# நடக்காத தேர்தலுக்கு ஏன் நங்கூரம் இடுகின்றார்கள்?

சிவகுமார் திவியா

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் எதிர்வரும் மார்ச் மாதம் நடத்தப்படுமா என்பது எல்லோருடைய மனதிலும் ஏற்பட்டுள்ள கேள்வி.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் விவகாரம் நாட்டில் தற்போது பேசுபொருளாக மாறியுள்ளது. அரசு உள்ளூராட்சி மன்றத் தேர்தலை பிற்போடுவதற்கான காய்நகர்த்தல்களை முன்னெடுத்து வருவதாக எதிர்க்கட்சி தொடர்ச்சியாக குற்றஞ்சாட்டி வருகின்றது. 2023ஆம் ஆண்டு மார்ச் மாதம் 20ஆம் திகதிக்கு முன்னர் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்று தேர்தல் ஆணைக்குழு அறிவித்துள்ள நிலையில், ஒருபக்கம் பொருளாதாரப் பிரச்சினை முண்டிக்கொண்டு நின்றாலும் மறுபக்கம் தேர்தல் களம் சுறுசுறுப்பாக தமது வேலைகளை ஆரம்பித்துள்ளது.


குறிப்பிட்ட காலத்தில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதற்கு தேர்தல் ஆணைக்குழு தயாராகி வருகின்றது. இது தேர்தல் ஆணைக்குழுவின் கடமையாகும். நாட்டுமக்களின் வாக்குரிமை தொடர்பில் கடந்த காலங்களில் நீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்புகளின்படி தேர்தலைப் பின்தள்ளுவதற்கு நீதிமன்றம் சந்தர்ப்பம் வழங்காது என்று தேர்தல் ஆணைக்குழு நம்பிக்கை வைத்துள்ளது. இலங்கையில் வரலாறு காணாத அளவுக்கு பஞ்சம் நிலவி வருவதால், அத்தியாவசிய தேவையான உணவுப் பொருட்களின் விலை பல மடங்கு உயர்ந்திருப்பது அந்நாட்டு மக்களின் இயல்பு வாழ்க்கையை முற்றிலும் பாதிப்படைய வைத்திருக்கிறது.

ஒரு கிலோ அரிசியின் விலை 200 ரூபாவைத் தாண்டி விற்பனையாகிறது. ஒரு முட்டையின் விலை 55 ரூபாவுக்கும், பெற்றோல், டீசலின் விலை 450 ரூபாவையும் தாண்டி விற்பனை செய்யப்படுகிறது. இங்கு 50 சதவீத ஹோட்டல்கள் மூடப்பட்டிருப்பதுடன், கொழும்பு உட்பட அனைத்து மாவட்டங்களும் பல மணிநேரம் இருளில் மூழ்கடிக்கப்பட்டுள்ளது. இவற்றிற்கெல்லாம் என்ன காரணம்? இவ்வாறான சூழ்நிலையிலும் நடைபெறாத உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்காக மார்ச் மாதம் நடைபெறும் என்ற எதிர்பார்ப்பில் தேர்தல் கூட்டணிகள் குறித்த பேச்சுவார்த்தைகள், உடன்பாடுகள் தொடர்பாக கட்சிகள் அனைத்தும் தேர்தல் வேலைகளை ஆரம்பித்துள்ளன.

வவுனியா மாவட்டத்தில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான முதலாவது கட்டுப்பணம் நேற்று மாலை செலுத்தப்பட்டது. இவ்வாறு ஒரு பக்கம், தேர்தல் களம் சுறுசுறுப்பாகவே களைகட்டுகின்றது. ஆனால், இலங்கை தற்போதைய பாரிய பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ளது. இதனால் மனித வாழ்க்கை நெருக்கடி என்ற நிலையை எட்டியுள்ளது. முக்கியமான உணவுப்பொருள், எரிபொருள், அத்தியாவசிய மருந்துகள் என அனைத்து நுகர்பொருட்களுக்கும் தட்டுப்பாடு, பயங்கரமான உணவுப் பொருள் விலையேற்றம், முதலீடுகள் முடக்கம், அமைதியிழந்து வீதிக்கு வந்து போராடும் மக்கள். இவ்வாறான சூழ்நிலையில உள்ளூராட்சி மன்றத் தேர்தல் சாத்தியமாகுமா?

வரலாற்றில் கடந்த மூன்று வருட காலமாக மக்கள் அனுபவித்த துன்பதுயரங்கள் கொஞ்சநஞ்சமல்ல. உயிரிழப்புகள், வறுமை, தொழில் வாய்ப்பின்மை என்றெல்லாம் மக்கள் விபரிக்க முடியாத துன்பங்களை கடந்த சுமார் மூன்று வருடங்களாக அனுபவித்து வருகின்றனர் என்பது நம் எல்லோருக்குமே நன்கு அறிந்த - தெரிந்த உண்மையே.

எமது நாட்டில் அனைத்து வழியிலும் பொருளாதார நிலைமை தற்போது சீராக இல்லை. செல்வந்த நாடுகளும் கூட தற்போது பொருளாதாரத்தில் வீழ்ச்சி நிலைமையிலேயே உள்ளன என்பதுதான் உண்மை. இந்த நெருக்கடி திடீரென்று உருவானதல்ல. கடந்த ஒருசில வருடங்களுக்கும் மேலாக இதுகுறித்த எச்சரிக்கைகள் வந்துகொண்டிருக்கின்றன. 2019 ஈஸ்டர் அன்று இஸ்லாமிய ஜிகாதி பயங்கர வாதிகள் நிகழ்த்திய பெரும் குண்டுவெடிப்புத் தாக்குதல் இந்த சீரழிவுத் தொடரின் முதல்கண்ணி. வெளிநாட்டுப் பயணிகளின் வருகையால் இயங்கும் சுற்றுலாத் துறை இலங்கையின் பொருளாதாரத்துக்கு 15 வீதத்துக்கும் மேலாக பங்களிக்கும் துறை. இதனால் இது முற்றிலும் முடங்கிப்போனது.







இவ்வாறான சூழ்நிலைக்கு இரண்டாவது பெரும் காரணம், உலகப் பெருந்தொற்றான கொவிட் வைரஸின் பரவலாகும். சீனாவில் முதன்முதலில் தோன்றிய கொரோனா வைரஸ் தொற்று அதன்பின்னர் படிப்படியாக உலக நாடுகள் எங்குமே பரவி எமது நாட்டையும் விட்டுவைக்கவில்லை. இதனால் ஏற்படுத்திய பாதிப்புகள் ஏராளம். இலங்கை இப்படி அதலபாதாளத்துக்குச் சென்று கடனில் சிக்கித் தவிப்பதற்கான காரணம் என்ன என்பது பற்றி தெரிந்து கொள்வதற்கு முன்பு, எப்படியெல்லாம் இலங்கைக்கு வருமானம் கிடைத்தது, ஏன் இப்போது வரவில்லை என்பது குறித்தும் பார்க்கவேண்டியது அவசியமாகும்.

இலங்கையின் வருமானம் என்பது அங்கு உற்பத்தி செய்யப்படும் ஆடைகள், தேயிலை மற்றும் சுற்றுலா இதன்மூலம்தான் அதிகளவு கிடைக்கிறது. இந்த மூன்றை நம்பியே இலங்கை மக்கள் இருந்துவந்த நிலையில், கடந்த 2020ஆம் ஆண்டு உலகத்தையே ஆட்டிப்படைத்த கொரோனா, இலங்கையை மட்டும் விட்டுவைக்குமா என்ன? கொரோனாவின் கோரத்தாண்டவத்தைக் கட்டுப்படுத்த இலங்கை உட்பட பல நாடுகளும் சர்வதேச போக்குவரத்தை தற்காலிகமாக நிறுத்தின. இதனால் இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்டுவந்த தேயிலை, ஆடைகள் தேங்க ஆரம்பித்தன. அதுமட்டுமன்றி, சர்வதேச எல்லைகள் மூடப்பட்டு, ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டதால் சுற்றுலாத்துறை முற்றிலும் முடங்கியது. இவ்வாறு இலங்கையில் அடுத்தடுத்து வந்த கொவிட் தொற்று அலைகளால் மரண அடி வாங்கியது.

அதே ஆண்டில் ஆட்சிபீடத்தில் அமர்ந்திருந்த அரசு அந்த நாட்டின் பொருளாதாரத்தையும், நல்வாழ்வையும் நாசமாக்குவதற்கு என்னவெல்லாம் குளறுபடிகள் சாத்தியமோ எல்லாவற்றையும் "ரூம் போட்டு யோசித்து" செய்வதுபோல் ஒவ்வொன்றாக செய்தது.

வரி விகிதங்களை அபாயகரமான அளவுக்குக் குறைத்தல், விவசாயிகளுக்கு ஏகப்பட்ட மானியங்கள் சலுகைகள், அந்நியச் செலாவணியை மிச்சப்படுத்தலாம் என்ற குறுகிய நோக்கில் உரங்களின் இறக்குமதிக்குத் தடை. அதனால் ஏற்பட்ட வேளாண் விளைபொருள் உற்பத்தி வீழ்ச்சி. இப்படிச் சொல்லிக்கொண்டே போகலாம். எல்லாவற்றுக்கும் சிகரம் வைத்ததுபோல், இந்தியாவுடனான நெருக்கமான உறவிலிருந்து விலகி விலகி, பகாசுர சீனாவின் ராட்சத டிராகன் கரங்களில் தனது நாட்டின் துறைமுகம், கட்டமைப்புகள், வளங்கள் என ஏறக்குறைய எல்லாவற்றையும் அடகு வைத்துவிட்டு இப்போது இலங்கை முழி பிதுங்கி நிற்கிறது. ஆரோக்கியமான வளர்ச்சிப் பொருளாதாரம் என்ற நிலையிலிருந்து அதீதமான சலுகைப் பொருளாதாரம் என்பதை நோக்கிச் சென்ற அன்றைய அரசின் கேனத்தனத்திற்கு இலங்கை கொடுத்திருக்கும் மிகப்பெரிய விலை இது.

ஆயிரக்கணக்கான மக்கள் உயிரிழந்து போனது ஒருபுறமிருக்க, பொருளாதாரமே அதலபாதாளத்துக்குத் தள்ளப்பட்டது. தனிநபர் பொருளாதாரம் மாத்திரமன்றி, தேசிய வருமானமே வீழ்ச்சிக்குள்ளானது. கொவிட் தொற்றின் பரவுதலிலிருந்து படிப்படியாக மீண்டெழுந்துகொண்டு வரும்போதுதான் பொருளாதார நெருக்கடிகளும் தோற்றம் பெற்றன. பொருளாதார வீழ்ச்சிக்கு இலங்கையும் விதிவிலக்கல்ல. இவ்வாறு எல்லா நாடுகளும் இந்தக் கொரோனா காலகட்டத்தில் பல இன்னல்களை சந்தித்து பொருளாதாரத்தில் சற்று பின்னடைவுக்குத் தள்ளப்பட்டாலும், எமது நாட்டிற்கு வரும் வருமானத்திற்கான அனைத்து கதவுகளும் மூடப்பட்டதால், நம் நாட்டின் பொருளாதாரம் பிற நாடுகளைக் காட்டிலும் பெரும் பின்னடைவுக்குத் தள்ளப்பட்டது.

இலங்கையின் அந்நிய செலாவணி கிட்டத்தட்ட பல பில்லியன் டொலராக குறைந்துவிட்டது. இலங்கைக்கான வரவு குறைய குறைய, மத்திய கையிருப்பில் இருந்த அந்நிய செலாவணியும் வீழ்ச்சியடைந்ததால், பொருளாதார நெருக்கடியை சந்தித்தது இலங்கை. இதற்கும் விலைவாசிக்கும் என்ன சம்பந்தம் என்று கேட்டால், அந்நிய செலாவணியின் இருப்பு குறைந்ததால், இலங்கை மத்திய வங்கியானது ரூபாவின் மதிப்பைக் குறைத்திருக்கிறது. இதனால் பொருட்களின் விலை படிப்படியாக உயரத் துவங்கியிருக்கிறது.

ஒரு டொலருக்கு இலங்கையின் ரூபா மதிப்பு சரிந்திருக்கிறது. இதனால்தான் அங்கு அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்ந்திருக்கிறது. இத்தகைய சூழ்நிலையில் உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்தப்போவதாக தேர்தல் ஆணையகம் அறிவிததுள்ளது. தேர்தல் ஆணைக்குழு தெரிவிக்கும் விதத்தில் தேர்தலை நடத்துவதென்றால் ஆகக்குறைந்தது சாதாரணமாக தேர்தலை நடத்துவதற்கு 10 பில்லியன் ரூபா செலவாவதாகவும் அது அரசாங்கத்திற்கு கிடைக்கும் வருமானம் அல்லது கடன் பெற்றுக்கொள்வதை அடிப்படையாக வைத்து தீர்மானிக்கப்படும் எனவும் இப்போது கையிருப்பிலுள்ள பணம் மிகக்குறைவு எனக் கூறப்படுகின்றது இவ்வாறான சூழ்நிலையில் தேர்தலுக்கான செலவுகள் அதிகமாக உள்ளமையால் திறைசேரி அதிகாரியுடனான உத்தரவாதம் வழங்கப்பட்டுள்ளதா என்பது புரியாத புதிராகவே உள்ளது. உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடைபெறுமா?

உள்ளூராட்சித் தேர்தலுக்கு மார்ச் மாதம் 2022 வாக்காளர் பட்டியலின் . வாக்குப் பதிவேட்டின்படி, ஒரு மில்லியன் அறுபத்து எட்டு இலட்சத்து ஐம்பத்தி ஆறாயிரத்து அறுநூற்று இருபத்தி ஒன்பது (1,68,56,629) பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர். 340 உள்ளூராட்சி மன்றங்களுக்கான உறுப்பினர்கள் தெரிவுக்குமான அனைத்து அடிப்படை நடவடிக்கைகளையும் ஆணையம் செய்து முடித்துள்ளது.

இந்துடன், மாநகர சபைகள், நகர சபைகள், பிரதேச சபைகள் உள்ளிட்ட உள்ளூராட்சி மன்றங்களுக்கு நியமனம் செய்யப்படுவர்கள் 8.000 உறுப்பினர்கள். ஆனால், 4,000 உறுப்பினர்களுக்கு மாத்திரமே சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளுக்கு பணம் ஒதுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்த ஜனாதிபதி, ஏனையோர் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளின்றி இலவசமாக பணியாற்றுவார்களா என்பதை தெரிவிக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட தலைவர்களை அண்மையில் (04ஆம் திகதி) கொழும்பில் வைத்து சந்தித்தபோது இரண்டு வருடங்களுக்குள் நாட்டை வீழ்ந்துள்ள பாதாளத்திலிருந்து மீட்பதற்காகவே தனக்கு ஆணை வழங்கப்பட்டுள்ளதாகவும் அந்த ஆணைக்குப் புறம்பாக செயற்பட தாம் ஒருபோதும் தயாரில்லை எனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் இறுதியாக 2018ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 10ஆம் திகதி இடம்பெற்றது. இத்தேர்தலில் 8 ஆயிரத்து 719 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர். அடுத்த உள்ளூராட்சி மன்றத் தேர்தல் 2022 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதமே நடத்தப்பட்டிருக்க வேண்டும். என்றாலும் விடயத்துக்குப் பொறுப்பான அப்போதைய அமைச்சர் தேர்தலை ஒருவருட காலத்துக்குப் பிற்போட்டார். அதன்படி ஒருவருட காலம் கடந்து அதாவது, 2023ஆம் ஆண்டு மார்ச் மாதம் 20ஆம் திகதிக்கு முன்னர் தேர்தல் நடத்தப்படவேண்டும்.

இந்நிலையில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஆலோசனையின்படி உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையைக் குறைத்தல் மற்றும் தேர்தல் முறைமையில் மாற்றங்களை ஏற்படுத்தல் ஆகிய ஏற்பாடுகளை 2023 மார்ச் மாதத்துக்கு முன்பு மேற்கொள்ள முடியாதுபோனால் இத்தேர்தல் மேலும் தாமதமாகலாம். தேர்தல் சட்ட திட்டங்களுக்கமைய விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரால் உள்ளூராட்சி மன்றங்களின் தேர்தலை ஆகக்கூடியது ஒரு வருட காலத்துக்கு மாத்திரமே பிற்போட முடியும்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை மேலும் கால-தாமதப்படுத்துவதை எதிர்ப்பதாக தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்துள்ளார். அத்தோடு தேர்தலை மார்ச் மாதம் நடத்துவதற்கு தேர்தல் ஆணைக்குழுவால் அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

தேர்தல் முறைமையில் மாற்றங்களைச் செய்யவேண்டும் என்ற ஜனாதிபதியின் கருத்து, தனது சுயநலம் மற்றும் தான் சார்ந்திருக்கும் மொட்டு கட்சியின் நலனுக்காகவே என்று பலராலும் கருத்து வெளியிடப்பட்டு வருகிறது. தேர்தலை தாமதப்படுத்தும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் முயற்சி தனது அதிகாரத்தை தக்க வைத்துக்கொள்வதற்கான முயற்சி என்று கூறப்படுகிறது. தேர்தல் ஒன்று வந்தால் தனது அதிகார இருப்புக்கு பாதிப்பு ஏற்படும் என்ற விடயமே பிரதான காரணமாகும். தற்போது பதவியிலுள்ள அரசாங்கத்துக்கு மக்கள் ஆணை கிடையாது. தேர்தல் ஒன்று வந்தால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினதும் அவர் சார்ந்திருக்கின்ற மொட்டு கட்சியினதும் செல்வாக்கு பாரியளவில் வீழ்ச்சியடையும். அதனால் தேர்தல் ஒன்று வருவதைத் தடுக்க வேண்டும் என்பதற்காகவே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தேர்தல் முறைமையில் மாற்றம் தேவை என்பதில் உறுதியாக உள்ளார்.

நடப்பாண்டு ஜனவரி முதலாம் திகதி 60 வயதை பூர்த்திசெய்த சுமார் 15,000 பொலிஸ் உத்தியோகத்தர்கள் ஓய்வு பெற்றுள்ளனர். இவர்கள் பொலிஸ் திணைக்களத்தின் பல்வேறு மட்டங்களில் பணியாற்றியவர்கள். சிரேஷ்ட உப பொலிஸ் மா அதிபர்கள் உதவி பொலிஸ் மா அதிபர்கள், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்கள் உள்ளிட்ட அதிகாரிகள் பவர் இவ்வாறு ஓய்வுபெற்றுள்ளனர்.

இவ்வாறான சூழ்நிலையில. 2023 மார்ச் மாதம் நாட்டில் தேர்தலொன்று நடைபெற்றால் தேர்தல் கடமைகளுக்கான பொலிஸ் உத்தியோகத்தர்கள் போதுமானதாக உள்ளார்களா? இது தொடர்பாக பொலிஸ் மா அதிபருடன் கலந்துரையாடப்பட்டு பாதுகாப்புக்கான உறுதி பற்றிய தீர்மானம் பெறப்பட்டதா? இவ்வாறு பல கேள்விகள் உள்ளன.

இவ்வாறான செயற்பாடுகளை முன்னெடுத்தால் மக்கள் மத்தியில் பல சந்தேகங்கள் முளைவிடலாம் அல்லது உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடைபெறும். நாங்கள் அரசாங்கத்துக்கு தகுந்த பாடம் புகட்டுவோம் என நாட்டு மக்களில் பெரும்பான்மையினரும் எதிர்க்கட்சிகளும் எதிர்பார்த்திருந்தன. அதற்கான காய்களை நகர்த்தலா? என சந்தேகங்கள் உலாவுகின்றன.

இந்நிலையில், உள்ளூராட்சி மன்றத் தேர்தல், தேர்தல் ஆணைக்குழு அறிவித்துள்ளவாறு எதிர்வரும் மார்ச் மாதம் நடத்தப்படுமா என்பது சந்தேகத்துக்கு இடமாகவேயுள்ளது.

# ஈழவர் ஜனநாயக முன்னணி இதுவரை எந்தக் கட்சியுடனும் கூட்டுச் சேரவில்லை

## கட்சித் தலைவர் ஸ்ரீ ராஜராஜேந்திரா

(மண்முனை நிருபர்)

ஈழவர் ஜனநாயக முன்னணி எந்தக் கட்சியுடனும் இதுவரை கூட்டுச்சேரவில்லை. எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் ஒரு அரசியல் கட்சியாக எமது ஈரோஸ் ஜனநாயக முன்னணி மக்கள் முன் மக்கள் கட்சியாக தேர்தலில் களமிறங்கும், கட்சிகளின் தேர்தல் கூட்டுகளுக்கப்பால் மக்களுடைய உரிமைகள், உடைமைப் போராட்டம் இவைகளை முன்னிறுத்தி, போலித் தேர்தல் கூட்டாக இல்லாமல் மக்களின் அபிலாஷைகளை வென்றெடுக்கக்கூடிய வகையில் அக்கூட்டு அமையவேண்டும் - என அக்கட்சியின் தலைவர் இரா.ஸ்ரீ ராஜராஜேந்திரா தெரிவித்தார்.



நேற்று முன்தினம் (14) மாலை மட்டக்களப்பில் அமைந்துள்ள கிழக்கு ஊடக மன்றத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு இக்கருத்தை தெரிவித்தார்.

இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கட்சியின் ஆலோசகரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான குணசீலன் செளந்தரராஜா, கட்சியின் பொருளாளர் ஸ்ரீஸ்காந்தராஜா, ஊடக இணைப்பாளர் பகீரதன், மத்திய குழ உறுப்பினர் சுந்தரலிங்கம் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

அங்கு அவர் மேலும் குறிப்பிடுகையில்,

ஒரு கட்சியானது மக்களின் தேவைகளுக்கு நீதிமன்றங்களில் நிற்பதற்கப்பால் கட்சியின் பதவி, பட்டங்கள், யார் அந்தக் கட்சியில் பதவியை வகிக்க வேண்டும் என்கின்ற நிலைப்பாட்டில் நீதிமன்றங்களில் நிற்கின்ற அந்த கீழ்த்தரமான கட்சியாக இல்லாமல் மக்களின் பிரச்சினைகளை முன்நிறுத்தி மக்களுக்காக மன்றங்களில் ஏறி மக்களுக்கான கட்சியாக தொடர்ந்தும் செயற்படுவோம் என்பதையும் கூறிக்கொள்கிறேன்.

தேர்தலுக்காக இல்லாமல் மக்கள் நலன்சார்ந்து மக்களுக்காக செயற்படக்கூடிய கட்சிகளுடன் ஓர் உறுதிப்பாட்டுடன் சேர்ந்து பயணிப்பதை நாம் விரும்புகின்றோம்.

இதேவேளை, ஈரோஸ் ஜனநாயக முன்னணி எனும் பெயரில் ஒலிபெருக்கி சின்னத்தில் நாம் எமது அரசியல் நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்கின்றோம், இதேபோன்று ஈழவர் ஜனநாயக முன்னணி எனும் பெயரில் இரா.பிரபாகரனின் கட்சியும் அவர்களது செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது. அது அவர்களது ஜனநாயக உரிமை. ஆனால், இந்த இரண்டு கட்சிகளும் தனித்தே செயற்பட்டுக்கொண்டிருக்கின்றன.

எமது ஈழவர் ஜனநாயக முன்னணி எந்தக் கட்சியுடனும் இதுவரை கூட்டுச்சேரவில்லை என்பதையும் இச்சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்கிறேன் - என்றார்.

# ஹெரோயினுடன் ஒருவர் கைது

(கோணாவத்தை நிருபர்)


அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஒலுவில் பிரதேசத்தில் ஹெரோயினுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

அக்கரைப்பற்று விசேட அதிரடிப்படையினருக்கு கிடைக்கப்பட்ட இரகசிய தகவலின்படி குறித்த பிரதேசத்திற்கு சென்ற விசேட அதிரடிப்படையினர் நபர் ஒருவரை கைதுசெய்துள்ளதுடன், அவரிடமிருந்து 1000 மில்லிகிராம் ஹெரோயினும் கைப்பற்றப்பட்டுள்ளது.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபரை அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்றத்தில் நேற்றுமுன்தினம் (14) நீதிபதி எம்.எச்.எம்.ஹம்ஸா முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டபோது எதிர்வரும் 27ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

## போடியார் புலம்பல்!



முன்னாள் ஜனாதிபதி
ஈஸ்டர் குண்டு தாக்குதல
தடுக்காத குற்றத்துக்கு
பத்துக்கோடி ரூபா
கட்டோணும் எண்டு
உயர் நீதிமன்றம் தீர்ப்பு
வழங்கியிருக்கு எலுவா?
அப்ப அவரும் காசி நோட்டு
அடிச்சாலும் அடிப்பாரு . ஏன்
நமக்கு வம்பு. அது ஒருபக்கம்
கிடக்கட்டும்.. நல்லாட்சில
நம்மள ஏமாத்தினதுக்கு
கடவுள் கொடுத்த
தண்டன இந்த அப்பச்சட்டி
மைத்ரிக்கு..!



தைத்திருநாளை முன்னிட்டு ஆலயங்களில் பொங்கல் பொங்கி சூரிய பகவானுக்கு விசேட வழிபாடுகள் இடம்பெற்றன. இதற்கமைய காரைதீவு கிழக்கிலங்கை அருள்மிகு ஸ்ரீ கண்ணகி அம்மன் ஆலயத்தில் தைத்திருநாளை முன்னிட்டு விசேட பொங்கல் நிகழ்வும் பூஜையும் இடம்பெற்றன. (காரைதீவு நிருபர்)

# ஐஸ் மற்றும் ஹெரோயினுடன் ஏறாவூரில் ஒரேநாளில் ஐவர் கைது

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு ஏறாவூரில் ஐஸ் மற்றும் ஹெரோயின் போதைப்பொருட்களுடன் ஒரே நாளில் கைதுசெய்யப்பட்ட 5 போதைப்பொருள் வியாபாரிகளை எதிர்வரும் 24ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதவான் பீற்றர்போல் உத்தரவிட்டார்.

ஏறாவூர் பொலிஸ் நிலைய போதை ஒழிப்புப் பிரிவு பொறுப்பதிகாரி உப பரிசோதகர் வை.விஜயராஜா தலைமையிலான பொலிஸ் குழுவினர் ஏறாவூர் பிரதேசத்தில் போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டு வந்தவர்களை சுற்றிவளைத்து முற்றுகையிட்டனர்.

இதன்போது 30 வயதுடைய இரட்டைக் கொலை தொடர்பான சந்தேகநபர், வாழைச்சேனை பொலிஸ் பிரிவிலுள்ள பிறைந்துறைச்சேனையை பிறப்பிடமாகக்கொண்ட 26 வயதுடைய வியாபாரி, காணி மாப்பியாவான 40 வயதுடையவர் மற்றும் ஏறாவூரைச் சேர்ந்த 36 வயதுடைவர், 24 வயதுடைய போதை வியாபாரிகளான 5 பேர் போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டுக்கொண்டிருந்தபோது 6 கிராம் ஐஸ் போதைப்பொருளும், 2.6 கிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் கைதுசெய்தனர்.

இவ்வாறு கைதுசெய்தவர்களை மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதவான் பீற்றர் போல் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டபோது அவர்களை எதிர்வரும் 24ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

# வவுணதீவு பாவற்கொடிச்சேனையில் வலம்புரிச் சங்குடன் ஒருவர் கைது

(கல்லடி நிருபர்)



களுவாஞ்சிக்குடி விசேட அதிரடிப்படையினரால் வவுணதீவு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பாவற்கொடிச்சேனையில் 33 வயதுடைய நபரொருவர் வலம்புரிச் சங்கொன்றுடன் நேற்று முன்தினம் (14) இரவு 10 மணிக்கு கைதுசெய்யப்பட்டுள்ளதாதாக வவுணதீவு பொலிஸார் தெரிவித்தனர்.


இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த தகவல் ஒன்றின் அடிப்படையில் களுவாஞ்சிக்குடி விசேட அதிரடிப்படையினரால் குறித்த நபர் விற்பனை நடவடிக்கையில் ஈடுபட்டுக்கொண்டிருந்தவேளை கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்ட நபர் மற்றும் சங்கு என்பன வவுணதீவு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டன.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வவுணதீவு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# மட்டு. நகரில் இ.போ.ச. பஸ் கோர விபத்து

## தெய்வாதீனமாக உயிர் தப்பிய பயணிகள்



(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு - திருகோணமலை பிரதான வீதியின் ஊறணி பகுதியில் நேற்று முன்தினம் அதிகாலை 5.30 மணியளவில் இலங்கை போக்குவரத்து சபை பஸ் பாரிய விபத்திற்குள்ளாகிய நிலையில், அதில் பயணித்தவர்கள் தெய்வாதீனமாக உயிர் தப்பியுள்ளனர்.

ஏறாவூரிலிருந்து அக்கரைப்பற்று நோக்கிச்சென்ற பஸ் ஊறணிச் சந்தியிலுள்ள பனை மரத்தில் மோதி கடந்த சனிக்கிழமை விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த விபத்தில் இரண்டு பயணிகள் காயமடைந்த நிலையில், மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

பஸ்ஸின் முன்னால் திடீரென குறுக்கறுத்த சைக்கிளில் பயணித்த நபரை காப்பாற்ற முயற்சித்த வேளையிலேயே பஸ் பனை மரத்துடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளதாக குறித்த பஸ்ஸின் நடத்துனர் தெரிவித்தார்.

இந்த விபத்து காரணமாக பஸ்ஸின் முன்பக்க பகுதி கடுமையாக சேதமடைந்துள்ளதுடன், குறித்த விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை மட்டக்களப்பு தலைமையகப் போக்குவரத்து பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# பெரியநீலாவணை பொலிஸ் நிலையத்தில் பொங்கல் விழா



(பெரியநீலாவணை நிருபர்)

பெரியநீலாவணை பொலிஸ் நிலையம் மற்றும் பொலிஸ் நிலையத்தின் ஆலோசனைக் குழு என்பன ஒன்றிணைந்து ஏற்பாடுசெய்த தைப்பொங்கல் நிகழ்வு நேற்று (15) பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஆர்.ஜீ.துஸார திலங்க ஜெயலால் தலைமையில் நடைபெற்றது.

பாண்டிருப்பு சிவன் கோவில் குருக்கள் எஸ்.தர்மலிங்கம் முன்னிலையில் நடைபெற்ற இந்த பொங்கல் நிகழ்வில் பொலிஸ் நிலைய ஆலோசனைக் குழுத் தலைவர் சாஜித் முனீர் உட்பட ஆலோசனைக் குழு உறுப்பினர்கள், பொலிஸ் நிலைய உத்தியோகத்தர்கள், பிரதேச மக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.



# குச்சவெளியில் 50 இலட்சம் பெறுமதியான மீன்பிடி உபகரணங்கள் வழங்கிவைப்பு



(கிண்ணியா நிருபர்)

திருகோணமலை, குச்சவெளி பிரதேச செயலாளர் பிரிவில் வறுமைக்கோட்டின்கீழ் வாழ்கின்ற மீனவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கோடு சுமார் 50 இலட்சம் ரூபா பெறுமதியான மீன்பிடி உபகரணங்கள் மற்றும் கொடுவா மீன் வளர்ப்புக்கான கூடுகள் உள்ளிட்ட 50 இலட்சம் ரூபா பெறுமதியான மொத்தமாக ஒரு கோடி ரூபா பெறுமதியான பொருட்கள் வழங்கும் நிகழ்வு (14) இடம்பெற்றது.

இதில் இரண்டு மீன்பிடிப் படகுகள், இரண்டு மீன்பிடி இயந்திரங்கள் மற்றும் மீன்பிடி வலைகள் மற்றும் ஏனைய உபகரணங்களும் வழங்கப்பட்டன. இறக்கக்கண்டி, வாலையூற்று, புடவைக்கட்டு மீனவர்களுக்காக கொடுவா மீன்வளர்ப்பு உபகரணங்களும் இதன்போது வழங்கப்பட்டன.

குறித்த பகுதியில் மீனவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும் அரசின் கொள்கைப் பிரகடனத்துக்கமைய உணவு உற்பத்தி மற்றும் அதனோடு இணைந்த திட்டத்துக்கு பங்களிக்கும் வகையில் இவ்வாறான உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

# கசிப்பு உற்பத்தி நிலையம் பொலிஸாரால் முற்றுகை



(மூதூர் நிருபர்)

மூதூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பாரதிபுரம் பகுதியிலுள்ள வீடொன்றில் வைத்து மறைமுகமாக கசிப்பு காய்ச்சப்பட்ட இடத்தை மூதூர் சிறுகுற்றத்தடுப்புப் பொலிஸார் முற்றுகையிட்டனர்.

இதன்போது கசிப்பு காய்ச்சப்படுத்தப்படும் கோடா 7700 மில்லிலீற்றர், கசிப்பு 3800 மில்லிலீற்றர் என்பவற்றையும் கசிப்பு சாராயம் காய்ச்சப் பயன்படுத்தப்படும் உபகரணங்களையும் பொலிஸார் கைப்பற்றினர்.

அத்தோடு கசிப்பு காய்ச்சியதாக சந்தேகிக்கப்படும் 39 வயது சந்தேகநபரையும் சிறுகுற்றத்தடுப்புப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

மூதூர் - பாரதிபுரம் பகுதியிலுள்ள வீடொன்றில் கசிப்பு காய்ச்சி விற்பனை செய்யப்படுவதாக பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் இச்சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபரை மூதூர் நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்துவதற்கான ஏற்பாடுகளை மூதூர் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# உலக செய்திகள்

## பொன்னம்பலமேட்டில் ஜோதிவடிவில் ஐயப்பன்



சபரிமலை ஐயப்பன் கோவிலில் மகரவிளக்கு பூஜையை ஒட்டி, பொன்னம்பலமேட்டில் ஜோதி வடிவில் காட்சி தந்த ஐயப்ப சுவாமியை பல்லாயிரக் கணக்கான பக்தர்கள் தரிசனம் செய்தனர்.

மகர விளக்கு பூஜையையொட்டி, ஐயப்பனுக்கு அணிவிக்கப்படும் திருவாபரணங்கள் பந்தள அரண்மனையிலிருந்து ஊர்வலமாக சபரிமலைக்கு கொண்டுசெல்லப்பட்டது. பிறகு, ஐயப்ப சுவாமிக்கு திருவாபரணங்கள் அணிவிக்கப்பட்டு மகா தீபாராதனை காண்பிக்கப்பட்டது.

இதையடுத்து, பொன்னம்பலமேட்டில் 3 முறை ஜோதியாக ஐயப்ப சுவாமி பக்தர்களுக்கு காட்சியளித்தார். விண்ணதிர சரண கோஷங்களுடன் மகர ஜோதியை பக்தர்கள் கண்டு தரிசித்தனர்.

## கொரோனாவால் சீனாவில் 60,000 பேர் உயிரிழப்பு

கொவிட் தொடர்பான இறப்பு எண்ணிக்கை சுமார் 60 ஆயிரம் என்று சீன அரசு முதன்முறையாக அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது.

கடந்த டிசம்பர் மாதம் 7ஆம் திகதி கட்டுப்பாடுகளை சீனா தளர்த்திய பின்னர் கொரோனா வேகமாகப் பரவத் தொடங்கியது. தினமும் 5 அல்லது 10 பேர் மட்டுமே உயிரிழப்பு என்று சீனா உண்மைகளை மூடி மறைப்பதாக உலக சுகாதார அமைப்பு முதல் பல்வேறு தரப்பில் இருந்தும் கண்டனம் எழுந்தது.

இந்நிலையில், நேற்றுமுன்தினம் சீனாவின் தேசிய சுகாதார அமைப்பு சுமார் 60 ஆயிரம் பேர் கொவிட்டால் உயிரிழந்துள்ளதாக அறிவித்துள்ளது.

சீனாவில் பொது முடக்க கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்ட கடந்த மாதம் 8ஆம் திகதியிலிருந்து ஜனவரி 12ஆம் திகதிவரை 59 ஆயிரத்து 938 பேர் கொரோனா பாதிப்பு தொடர்பாக உயிரிழந்திருப்பதாக சுகாதார அதிகாரி ஜியாவோ யாஹுய் தெரிவித்துள்ளார்.

# நேபாள விமான விபத்து: 72 பேரும் உயிரிழப்பு?

### நாடுமுழுவதும் இன்று துக்கம் அனுஷ்டிப்பு





நேபாளில் 72 பேருடன் பயணித்த விமானமொன்று ஓடுதளத்திலேயே தீப்பிடித்து விபத்துக்குள்ளானதில் அதில் பயணித்த அனைவரும் உயிரிழந்திருக்கலாம் என அஞ்சப்படுகிறது.


விமான விபத்து குறித்து கவலை தெரிவித்துள்ள அந்நாட்டு பிரதமர் பிரசண்டா அவசர ஆலோசனை நடத்தினார். தொடர்ந்து கட்டுப்பாட்டு அறைக்குச் சென்று மீட்புப் பணிகளை ஆய்வு செய்தார்.

நேபாளம் முழுவதும் இன்று ஒரு நாள் துக்கம் அனுஷ்டிக்கப்படும் என அந்நாட்டு அரசு அறிவித்துள்ளது.

நேபாளத்தின் பொக்காரோ விமான நிலையத்திலிருந்து 68 பயணிகள் மற்றும் விமான ஊழியர்கள் நால்வர் உட்பட 72 பேருடன் புறப்பட்ட எட்டி எயார்லைன்ஸ் (Yeti Airlines) நிறுவனத்துக்குச் சொந்தமான ATR 72 என்ற விமானமொன்று விமானத்தில் திடீரென ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறு காரணமாக விமானம் ஓடுதளத்திலேயே விபத்துக்குள்ளாகி தீப்பிடித்து எரிந்துள்ளது.

குறித்த விமானத்தில் 2 கைக்குழந்தைகள் உட்பட 15 வெளிநாட்டினர் விமானத்தில் இருந்துள்ளனர். அவர்களில் 5 இந்தியர்கள், 4 ரஷ்யர்கள் ஒருவர் அயர்லாந்து நாட்டை சேர்ந்தவர், 2 பேர் கொரியாவை சேர்ந்தவர்கள், ஆர்ஜென்டினா, பிரான்ஸ் தலா ஒருவர் என மொத்தம் 15 வெளிநாட்டினரும் இருந்துள்ளனர்.

இதனிடையே விபத்துக்குள்ளான பொக்காரோ விமான நிலையம் மூடப்பட்டுள்ள நிலையில், அங்கு மீட்புப் பணிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. விமானத்தில் பயணித்த 72 பேரில் இதுவரை (பத்திரிகை அச்சுக்குச் செல்லும் வரை) 68 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளதாக அந்நாட்டு தகவல்கள் தெரிவிக்கின்றன. மேலும் மீட்புப் பணி தொடர்ந்தும் நடைபெற்றுவருகிறது.







## உக்ரைன் மீது ரஷ்யா ஏவுகணைத் தாக்குதல்

### அப்பாவி பொதுமக்கள் 23 பேர் உயிரிழப்பு; 6 குழந்தைகள் உட்பட 73 பேர் படுகாயம்



உக்ரைனில் பொதுமக்கள் தங்கியிருந்த அடுக்குமாடிக் குடியிருப்பு மீது ரஷ்யா மேற்கொண்ட ஏவுகணைத் தாக்குதலில் 23 பேர் உயிரிழந்துள்ளதுடன், 6 குழந்தைகள் உட்பட 73 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

மேலும் உயிரிழப்பு எண்ணிக்கை அதிகரிக்கக்கூடும் என அந்நாட்டு ஜனாதிபதி வொலோடிமிர் ஸெலென்ஸ்ஜி தெரிவித்துள்ளார்.

ரஷ்ய பயங்கரவாதம் மற்றும் பொதுமக்கள் மீதான தாக்குதல்களை முடிவுக்குக் கொண்டுவர அதிக ஆயுதங்களை வழங்குமாறு மேற்கத்தேய நட்பு நாடுகளுக்கு ஸெலென்ஸ்கி கோரிக்கை விடுத்துள்ளார்.

நேட்டோ கூட்டமைப்பில் இணைவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து கடந்த பெப்ரவரி 24ஆம் திகதி உக்ரைன் மீது ரஷ்யா போர்த் தொடுத்தது. இந்தப் போர் இன்று 328ஆவது நாளாகவும் தொடர்ந்தும் நீடித்து வருகிறது.

இந்நிலையில், உக்ரைனின் டினிப்ரோ நகரிலுள்ள ஒன்பது மாடிகளைக்கொண்ட அடுக்கு மாடிக் குடியிருப்பில் ரஷ்யா தொடர் வான் தாக்குதலை மேற்கொண்டுள்ளது.

குறித்த கட்டடத்தின் மீது 57 ஏவுகணைத் தாக்குதல்களையும், 69 கனரக ஆயுதங்கள் மூலமும் தாக்குதல் நடத்தியுள்ளது. இதனால் அக் கட்டடம் முழுவதுமாக நொறுங்கியுள்ளது.

இத்தாக்குதலில் 23இற்கும் மேற்பட்ட அப்பாவி பொதுமக்கள் 5 பேர் உயிரிழந்துள்ளதாகவும், 6 குழந்தைகள் உட்பட 73 பேர் படுகாயமடைந்துள்ளதாகவும் உக்ரைன் அரசு தெரிவித்துள்ளது.

## ஆண்டின் முதல் கிராண்ட்ஸ்லாம் தொடர் இன்று ஆரம்பம்

### சாதிப்பாரா ஜோகோவிச்?





ஆண்டில் நடைபெறும் கிராண்ட்ஸ்லாம் என்ற உயரிய அந்தஸ்து பெற்ற 4 டென்னிஸ் தொடர்களில் ஒன்றான ஆண்டின் முதல் கிராண்ட்ஸ்லாம் தொடரான அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் தொடர் இன்று மெல்போர்னில் ஆரம்பமாகிறது. எதிர்வரும் 29ஆம் திகதிவரை நடக்கும் இந்த டென்னிஸ் திருவிழாவில் முன்னணி நட்சத்திரங்கள் பங்கேற்கிறார்கள்.

கடந்த ஆண்டு கொரோனா தடுப்பூசி போடாத விவகாரத்தால் கலந்து கொள்ள அனுமதிக்கப்படாமல் நாட்டுக்கு திருப்பி அனுப்பப்பட்ட முன்னாள் நம்பர் வன் வீரர் நோவக் ஜோகோவிச் (செர்பியா), இந்த சீசனில் விளையாடவுள்ளார். ஆஸி. ஓபனை அதிக முறை ருசித்த வீரர் (9 முறை) என்ற பெருமைக்குரியவராவார். அவர் கிண்ணத்தை வெல்லும் பட்சத்தில் அதிக கிராண்ட்ஸ்லாம் வென்றவர்களின் பட்டியலில் முதலிடத்தில் இருக்கும் ஸ்பெயினின் ரபெல் நடாலை (22 கிராண்ட்ஸ்லாம்) சமன் செய்து விடுவார்.

**மொத்த பரிசுத்தொகை**

2023ஆம் ஆண்டு தொடருக்கான மொத்த பரிசுத்தொகை 7 கோடியே 65 இலட்சம் அவுஸ்திரேலிய டொலர்களாகும். இது முந்தைய ஆண்டை விட 3.38 சதவீதம் அதிகமாகும். ஒற்றையர் பிரிவில் பட்டம் வெல்வோருக்கு 29 இலட்சத்து 75 ஆயிரம் ஆஸி. டொலர் பரிசுத்தொகையுடன், 2 ஆயிரம் தரவரிசை புள்ளிகளும் கிடைக்கும். இறுதி ஆட்டத்தில் தோற்கும் வீர, வீராங்கனைக்கு தலா 16 இலட்சத்து 25 ஆயிரம் ஆஸி. டொலர் பரிசாக வழங்கப்படும்.

இரட்டையரில் வாகை சூடும் ஜோடி 6 இலட்சத்து 95 ஆயிரம் ஆஸி. டொலர்கள் பரிசாக பெறுவார்கள். இலங்கை நேரப்படி அதிகாலை 5.30 மணிக்கு போட்டிகள் ஆரம்பமாகும்.

# ஐ.சி.சி. இளையோர் மகளிர் T20 உலகக் கிண்ணம்: தொடரை வெற்றியுடன் ஆரம்பித்த இலங்கை

### இன்று பங்களாதேஷுடன் பலப்பரீட்சை



ஐ.சி.சி. இளையோர் (19 வயதுக்குட்பட்ட) மகளிர் இருபதுக்கு 20 உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரில் முதல் ஆட்டத்தில் அமெரிக்காவை எதிர்கொண்ட இலங்கை அணி இலகுவெற்றியை பதிவுசெய்த நிலையில் இன்று தங்களது இரண்டாவது ஆட்டத்தில் பங்களாதேஷ் மகளிர் அணியை எதிர்கொள்கிறது.

அங்குரார்ப்பண மகளிர் இருபதுக்கு 20 உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடர் தென்னாபிரிக்காவில் கடந்த சனிக்கிழமை ஆரம்பமானது. குழு ஏயில் இடம்பெற்றுள்ள இலங்கை மகளிர் அணி தங்களது முதல் ஆட்டத்தில் அமெரிக்க மகளிர் அணியை நேற்று முன்தினம் எதிர்கொண்டது.

முதலில் துடுப்பெடுத்தாடிய அமெரிக்க அணி 20 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுகளை இழந்து 96 ஓட்டங்களைக் குவித்தது. 97 என்ற இலகுவான வெற்றியிலக்கை நோக்கி பதிலெடுத்தாடிய இலங்கை அணி 19 ஓவர்கள் நிறைவில் 3 விக்கெட்டுகளை மாத்திரம் இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. அந்த வகையில் இலங்கை அணி தங்களது இரண்டாவது ஆட்டத்தில் இன்று இலங்கை நேரப்படி பகல் 1.30 மணிக்கு பங்களாதேஷ் மகளிர் அணியை எதிர்கொள்கிறது.

16 அணிகள் பங்குபற்றும் அங்குரார்ப்பண 19 வயதுக்குட்பட்ட இருபது 20 உலகக்கிண்ணக் கிரிக்கெட்டில் மொத்தம் 41 போட்டிகள் நடைபெறவுள்ளன. இந்த 16 அணிகளும் 4 குழுக்களாக வகுக்கப்பட்டு முதல் சுற்று லீக் போட்டிகள் நடத்தப்படுகின்றன. இதில் 'ஏ' குழுவில் அவுஸ்திரேலியா, பங்களாதேஷ், இலங்கை, ஐக்கிய அமெரிக்க அணிகள் இடம்பெற்றுள்ளன.

ஒவ்வொரு குழுவிலும் முதல் 3 இடங்களைப் பெறும் அணிகள் 2ஆம் சுற்றான சுப்பர் 6 சுற்றில் இரண்டு குழுக்களாக போட்டியிடும். 4ஆம் இடங்களைப் பெறும் 4 அணிகள் நிரல்படுத்தலுக்கான சுற்றில் விளையாடும். முதல் சுற்றுப் போட்டிகள் ஜனவரி 14ஆம் திகதியிலிருந்து 19ஆம் திகதிவரை நடைபெறும். நிரல் படுத்தல் போட்டிகள் ஜனவரி 20ஆம் திகதி நடைபெறும்.

சுப்பர் 6 போட்டிகள் ஜனவரி 21ஆம் திகதியிலிருந்து 25ஆம் திகதிவரை நடைபெறும். அரையிறுதிப் போட்டிகள் ஜனவரி 27ஆம் திகதி நடைபெறுவதுடன், 28ஆம் திகதி இருப்பு நாளாக ஒதுக்கப்பட்டுள்ளது. இறுதிப் போட்டி ஜனவரி 29ஆம் திகதி நடைபெறும். இருப்பு நாளாக 30ஆம் திகதி ஒதுக்கப்பட்டுள்ளது.

## இலங்கை உதைபந்து சம்மேளனத்திற்கு புதிய தலைவர்



இலங்கை உதைபந்து சம்மேளனத்தின் புதிய தலைவராக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், ஊடகவியலாளருமான ஸ்ரீ ரங்கா தெரிவானார். நேற்று முன்தினம் விளையாட்டுத்துறை அமைச்சின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற இலங்கை உதைபந்து சம்மேளனத்திற்கான பொதுத் தேர்தலில் வெற்றிபெற்றதன் மூலம் இவர் இவ்வாறு புதிய தலைவராக தெரிவானார்.

குறித்த தேர்தலில் தலைவருக்கான வாக்கெடுப்பில் ஸ்ரீ ரங்கா 27 வாக்குகளைப் பெற, அவருக்கு எதிராக போட்டியிட்ட நாவலப்பிட்டிய உதைபந்து லீக்கின் ஜகத் டி சில்வா 24 வாக்குகளைப் பெற்றார். எவ்வாறாயினும், தலைவர் பதவிக்கான வேட்பாளராக இருந்த, இலங்கை உதைபந்து சம்மேளத்தின் முன்னாள் தலைவர் ஜஸ்வர் உமரின் வேட்பாளருக்கான தகுதி இறுதிநேரத்தில் விளையாட்டுத்துறை அமைச்சால் இரத்துசெய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# விளையாட்டு செய்திகள்

thamilansports@gmail.com

## களுத்துறை நகர சபை பாலர் பாடசாலை விளையாட்டுப் போட்டி





(பேருவளை பீ.எம்.முக்தார்)

களுத்துறை நகர சபை பிரிவிலுள்ள 12 பாலர் பாடசாலைகளையும் இணைத்து மாபெரும் விளையாட்டுப் போட்டியொன்று களுத்துறை வெட்டுமகட பாகிஸ்தான் விளையாட்டரங்கில் அண்மையில் நடைபெற்றது.

களுத்துறை நகரபிதா ஆமிர் நஸீரின் முயற்சியால் முதல் தடவையாக இந்த 12 பாலர் பாடசாலைகளையும் ஒன்றிணைத்து சிறார்களிடையே பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டதோடு அதில் வெற்றியீட்டியோருக்கு பரிசில்களும் வழங்கப்பட்டன. சிங்கள, தமிழ், முஸ்லிம் சிறார்கள் பல்வேறு போட்டிகளிலும் பங்குபற்றினர்.



சமூகங்களுக்கிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் நோக்கமாகவே இப்போட்டியை முதல் தடவையாக நடத்தியதாக நகரபிதா ஆமிர் நஸீர் தெரிவித்தார். முழு நாள் நிகழ்ச்சியாக நடைபெற்ற போட்டிகளின் இறுதியில் பரிசில்களும் வழங்கப்பட்டன. மூவின சிறுவர்களின் பெற்றோர்கள், ஆசிரியர்கள், நகர சபை உறுப்பினர்கள் பலரும் நிகழ்வில் கலந்துகொண்டனர்.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7